கங்கள் :-பன்னிரண்டு

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா. 7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | வைகாசி 19 | செவ்வாய்க்கிழமை | (01.06.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 165




## மட்டக்களப்பில் தொடரும் பயங்கரம்

# பத்திரிகையாளர் ஜி. நடேசன்

# நேற்றுக் காலை சுட்டுக் கொலை



மூத்த பத்திரிகையாளர் ஐயாத்துரை நடேசன் நேற்றுக் காலை 8.45 மணியளவில் அவரது இல்லத்தில இருந்து மட்டக்களப்பு மாமாங்க

(மட்டக்களப்பு)

**கிழக்கிலங்கையின் மூத்த பத்திரிகையாளர் ஐயாத்துரை நடேசன் நேற்றுக் காலை மட்டக்களப்பில் வைத்து இனந் தெரியாத துப்பாக்கி நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.**

வீதியில் உள்ள அவர் கடமையாற்றும் வருமானவரித் திணைக்களத்திற்கு மோட்டார் சைக்களில் சென்று கொண்டிருந்த போது வருமான வரித் திணைக்கள காரியாலயத்தில் இருந்து 200 மீற்றர் தொலைவில் வைத்து இனந்தெரியாத துப்பாக்கி நர்பகளால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

சுட்டுக் கொலை செய்யப்பட்ட பத்திரிகையாளர் நடேசனின் சடலம் வீதியோரத்திலும் அவரது மோடடார் சைக்கள் வீதியின் குறுக்கேயும் வீழ்ந்து கிடக்கக் காணப்பட்டதாக கிழக்குப் பிராந்தியப் பிரதிப பொலிஸ்மா அதிபர் நெவில் விஜயசிங்க தெரிவித்துள்ளார்.

பத்திரிகையாளர் நடேசன் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக உடனடித் தீவிர விசாரணைகளை மட்டக்களப்புப் பொலிஸார்

(12ஆம் பக்கம் பார்க்க)

## நடேசன் மீதான கொலைக்கு விடுதலைப் புலிகள் கண்டனம்

(கிளிநொச்சி)

தமிழ்த் தேசியப் பற்றாளரும் மூத்த ஊடகவியலாளருமான ஜி.நடேசன் மீதான கண்மூடித்தனமான படுகொலையை தமிழீழ விடுதலைப் புலிகள் வன்மையாகக் கண்டித்துள்ளனர்.

இது தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

தமிழ்த் தேசியத்தின் எழுச்சிக்கும் அதன் உட்கட்டுமான வளர்ச்சிக்கும் உரிய உழைப்புக்களை மேற்கொண்டு அயராது பாடுபட்டவர், தனது எழுத்துத்துறையால் தமிழத் தேசியத்தின் கூர்மைப்படுத்தலுககு ஓயாது அறைகூவல் விடுத்தவர்,

தமிழ்த் தேசியத்திற்கு மாறான நடவடிக்கைகளையும், கருத்துக்களையும் வன்மையாக மறுதலித்தவர். தமிழினத்தின் விடுதலைக்கான போராட்டத்தின் நியாயங்களை

(12ஆம் பக்கம் பார்க்க)



# மன்மோகன்சிங்குடன் கதிர்காமர் சந்திப்பு



## இனவிவகாரத்தில் தலையிடக் கோரிக்கை

(புதுடில்லி)

**இந்தியா சென்றிருந்த வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், வெளியுறவு அமைச்சர் நட்வர் சிங் ஆகியோரைச் சந்தித்து இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியா பங்கேற்க வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளார்.**

சனிக்கிழமை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இந்தியா சென்றிருந்தார்.

பிரதமர் மன்மோகன் சிங், வெளிவிவகார அமைச்சர் நட்வர்சிங், பாதுகாப்பு ஆலோசகர் ஜே.என். டிக்சித் ஆகியோருடனான சந்திப்பையடுத்து அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் இந்திய வெளிவிவகார அமைச்சர் நட்வர் சிங்கும் பத்திரிகையாளர் மாநாடொன்றை நடத்தியிருந்தார்கள். அப்பத்திரிகையாளர் மாநாட்டில் இந்தியாவின் வெளிவிவகார, அமைச்சர் நட்வர் சிங் கருத்துத் தெரிவிக்கையில் ஒன்றுபட்ட இலங்கைக்குள் அனைத்து மக்களினது அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய வகையில் இனப்பிரச்சினைக்குரிய தீர்வ காணப்பட வேண்டுமென்பதையும் இலங்கையில் குறிப்பாக வடக்குக் கிழக்குப் பகுதிகளின் புனர்வாழ்வு நடவடிக்கைகளில் விவசாயம்,பொருளாதாரம், மின்சாரம், போன்றவற்றில் உதவ இந்தியா தயாராக இருக்கின்றது.

இலங்கை இந்திய இராணுவ ஒப்பந்தம் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜியுடனான சந்திபின் போது லக்ஷ்மன் கதிர்காமர் கலந்துரையாடுவார்.

இலங்கைக்கான இராணுவப் பாதுகாப்பு விடயம் தொடர்பாக

(12ஆம் பக்கம் பார்க்க)

சோனியா காந்தி தலைமையிலான காங்கிரஸ் கூட்டணி அரசு அமைத்தபின் பிரதமர் மன்மோகன் சிங்கையும், வெளியுறவு அமைச்சர் நட்வர் சிங்கையும் பாதுகாப்பு ஆலோசகர் ஜே.என்.டிக்சித்தையும் சந்தித்த போதே இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

ஆறு நாள் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டு கடந்த

## ஜே.வி.பியின் கடிதத்துக்கு ஜனாதிபதி பதில் கடிதம்

(கொழும்பு)

அரசாங்கம் அமைக்கப்பட்டதன் பின்னர் அரசாங்கத்தின் சில செயற்பாடுகள் தொடர்பாக ஜே.வி.பியுடன் சிக்கல் தோன்றியிருப்பதாக கூறப்படுகின்ற போதிலும, அவர்கள் தனக்கு அனுப்பி வைதததுள்ள நான்கு பக்க கடிதத்தில் எந்தவொரு இடத்திலும் அவற்றைக கோடிட்டுக் காட்டவில்லை என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வாவிற்கு ஜனாதிபதி நேற்று அனுப்பி வைத்துள்ள பதில் கடிதத்தில், இரண்டு விடயங்களை மாத்திரம் கருத்தில் கொண்டு அனுப்பப்பட்டிருக்கும் முறைப்பாடுகள் ஏற்றுக் கொள்ளக கூடியவை அல்ல என்று சுட்டிக் காட்டியுள்ளதுடன் அக் குற்றச்சாட்டுக்களையும் நிராகரித்துள்ளார். அமைச்சரவையில் 35 பேர்

(12ஆம் பக்கம் பார்க்க)

## பாராளுமன்றில் முகங்கொடுக்க அரசாங்கம் தயங்குகிறது

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் பாராளுமன்றத்தில் முகங்கொடுக்க முடியாத நிலையில் உள்ளதால் தற்போது பாராளுமன்றச் செயன்முறைகளைத் தவர்த்துவருகிறது என ஜி.எல்.பரிஸ தெரிவித்துள்ளார். பாராளுமன்றம் மக்களின் குரல் அது அரசாங்கத்தினதோ அல்லது எதிர்க்கட்சியினதோ அல்ல. ஒரு மாதத்தில் எட்டுத் தடவைகள் பாராளுமன்றம கூட வேண்டுமென்பது பாராளுமன்ற நிலையியற் கட்டளையாகும். ஆனால் இவ்வாறு நடைபெறவில்லை. பாராளுமன்றில் பெரும்பான்மை இல்லாததால் பாராளுமன்ற அமர்வுகளை அரசாங்கம் காலம் தள்ளிப்போட்டு வருகின்றது. பாராளுமன்றில் பெரும்பான்மையை நிருபிக்க அரசாங்கம் பகிரதப்பிரயர்த்தனம் செய்கிறது. இது அரசின் இயலாத் தன்மையை வெளிப்படுத்துகின்றது என பீரிஸ் தெரிவித்துள்ளார்.(த)

## நடேசனின் இறுதிச் சடங்கு நெல்லியடியில் நடைபெறும்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்ட ஊடகவியலாளர் ஜி.நடேசனின் பூதவுடல் இறுதிக் கிரிகைக்காக நாளை அவரது சொந்த இடமான நெல்லியடிக்குக் கொண்டுவரப்படவுள்ளது.

இன்று நண்பகல் மட்டக்களப்பில் இருந்து வாகன பவனியாக எடுத்துவரும் அவரது பூதவுடல் வவுனியாவில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும் பின்னர் அங்கிருந்து புறப்பட்டு கிளிநொச்சியில் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு அங்கு அஞ்சலி உரைகளும் இடம் பெறும் இதில் விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தர்களும் அஞ்சலி உரை நிகழ்த்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனைத் தொடர்ந்து பூதவுடல் கிளிநொச்சியில் இருந்து நாளை புதன்கிழமை அவரது சொந்த இடமான நெல்லியடிக்குக் கொண்டு வரப்பட்டு அங்கு இறுதிக் கிரிகைகளும் அஞ்சலிக் கூட்டங்களும் நடைபெறவுள்ளன. (ச)

## நடேசனுக்கு நாட்டுப்பற்றாளர் விருது

(யாழ்ப்பாணம்)

இனந்தெரியாதோரால் நேற்றுச் சுட்டுக் கொல்லப்பட்ட ஊடகவியலாளர் ஜி.நடேசனுக்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் 'நாட்டுப் பற்றாளர் என்ற கௌரவத்தை வழங்கியுள்ளனர்.

யுத்த, சமாதான காலங்களில் இன்னல்களை அனுபவித்த தமிழ் மக்களின வாழ்வியல் துன்பங்களை விடுதலையுடன் கூடிய இயல்பு வாழ்க்கையை மக்கள் கொண்ட ஏக்கங்களை உள்நூரிலும் உலக நாடுகளிலும் வெளிக்கொண்டு

(12ஆம் பக்கம் பார்க்க)

சிவமயம்

# நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி

# அமுதசுரபி அன்னதான சபை

## அறிவித்தல்

பதிவு இல.S. 236



**மண்ணிற் பிறந்தார் பெறும்பயன் மதி சூடும்**
**அண்ணலார் அடியார் தமை அமுது செய்வித்தல்**
**கண்ணினால் அவர் நல்விழாப் பொலிவு கண்டார்தல்**
**உண்மையாமெனில் உலகர்முன் வருகென உரைப்பர்.**

*-சேக்கிழார். பெரிய புராணம்*

நயினாதீவு அருள்மிகு ஸ்ரீநாகபூஷணி அம்பிகையின் திருவருளின் துணை கொண்டு அம்பிகையைத் திரிசிக்கவரும் அடியார்களின் அரும்பசியை நீக்குவதற்கென அம்பிகையின் அடியவர்களினால் 1960ஆம் ஆண்டு ஆரம்பிக்கப் பெற்ற நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபை என்ற அறப்பணி நிலையம் ஆண்டு தோறும் பல்லாயிரக்கணக்கான அடியார்களுக்குச் சிறந்த முறையில் அன்னதானப் பணியை நிறைவேற்றி இவ்வாண்டு 45 ஆவது ஆண்டில் பிரவேசிக்கின்றது.

அம்பிகையின் திருப்பதியிலே நடைபெறும் இத்தொண்டு சிறந்த சேவையெனக் கருதி உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் வாழும் தருமசீலர்களாகிய வர்த்தகப் பெருமக்கள், தொழிலாளப் பெருமக்கள், விவசாயப் பெருமக்கள் மற்றும் அம்பிகை அடியார்கள், அன்பர்கள் அனைவரும் மனமுவந்து பணம், பொருள்உதவி செய்துவருவதுடன் ஆக்கமும் ஊக்கமும் தந்து அன்னதான சபையின் சேவையை பாராட்டியும் வருகின்றனர்.

அம்பிகையின் திருவருளால் பணிக்கப்பெற்ற இச் சேவையைச் சீரிய முறையில் நிறைவேற்றி அல்லும் பகலும் அயராது உழைக்கின்ற சபை நிர்வாகிகளுக்கும், உறுப்பினர்களுக்கும், நற்சேவைத் தொண்டர் களுக்கும், அமுதசுரபி மண்டபத்திற்கு வந்து பணி செய்யும் அடியார்களுக்கும் தத்தம் கடமைகளைத் திறமையாகச் செய்த, செய்கின்ற சேவையாளர்களுக்கும் ,இத் தொண்டினை நேரடியாகக் கண்டும் கேட்டும் ஆசியுரை வழங்கிய அன்பர்களுக்கும் எல்லாவற்றினும் மேலாக ஆண்டு தோறும் அன்னதானம் சிறப்பாக நடைபெற பணம் பொருள் முதலியவற்றை மனமுவந்து வழங்கிவரும் தருமசீலர்களுக்கும் எல்லாம் வல்ல ஸ்ரீநாகபூஷணி அம்பிகையின் திருவருள் கிடைக்கும் வண்ணம் பிரார்த்தித்து சபையின் மனமுவந்த பணிவார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வருடம் ஆனி 4ம் நாள் (18-06-2004) வெள்ளிக்கிழமை அம்பிகையின் உயர் திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆனி 17ம் நாள் (1-07-2004) தேர்த்திருவிழாவும் ஆனி 18ம் நாள் (02-07-2004) தீர்த்தத் திருவிழாவும் மறுநாள் தெப்பத்திருவிழாவுடன் நிறைவு பெறவுள்ளது. இந்நாட்களில் அம்பிகையைத் தருசிக்க வரும் அடியார்களுக்கு சிறந்த முறையில் 16 நாட்களும் இரவும், பகலும் அன்னதானம் வழங்க சகல ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளன. எனவே தருமசீலர்களான உங்களிடம் அமுதசுரபி அன்னதான சபையால் நியமிக்கப்பட்ட நற்சேவைத் தொண்டர்கள் 01-06-2004 தொடக்கம் 15-06-2004 வரை வருகைதருவார்கள். அவர்களிடம் பணம், பொருள் முதலிய தங்களின் உதவிகளை வழங்கி உரிய பற்றுச் சீட்டைத் தவறாது பெற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

**அம்பிகையின் ஆலயத்தில் இருந்து தெற்குப் புறமாகச் செல்லும் நெடுஞ்சாலையில் 100 மீற்றர் தொலைவில் அமுதசுரபி மண்டபம் அமைந்துள்ளது.**

பணிவுடன்
**கு.சாந்தலிங்கம்**
கௌரவ செயலாளர்,
அமுதசுரபி மண்டபம், நயினாதீவு-2

# யாழ்ப்பாணப் பொதுசன நூலகம்

# ஈழத்தமிழரின் கலாசார சின்னம்

**யாழ்ப்பாணப் பொதுசன நூலகம் சிங்களப் பேரினவாத சக்திகளினால் திட்டு எரியூட்டப்பட்டு இன்றுடன் 23 வருடங்கள் பூர்த்தியாகின்றன. அதனை நினைவு கூருமுகமாக இக் கட்டுரை பிரசுரமாகின்றது**

சொத்துக்களில் பிரதான ஈழத் தமிழ் மக்களின் கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்கள் மற்றும் கல்வியின் வெளிப்பாட்டுச் சின்னங்களாகத் திகழ்வது யாழ். பொது சன நூலகம். இது ஒரு தனி நூலகத்தின் இழப்பன்று. கல்வியை வாழ்வின் அடிநாதமாகக் கொண்டு உருவாகி வந்ததொரு சமூகத்தின் கலாசாரப் படுகொலையாகும். யாழ்ப்பாண பொதுசன நூலகம் எத்தகையவரால் தாக்கப் பட்டதென்பது யாவரும் அறிந்த தொன்று. இவ்வித அநாகரிக நிகழ்ச்சி இக்கால வரலாற்றில் இடம் பெறாததொன்றாகும்.

**''எண் என்ப ஏனை எழுத்
தென்ப இவ்விரண்டும்
கண் என்ப வாழும் உயிர்க்கு''**

என்பது தெய்வப் புலவர் திருவள்ளுவரின் வாக்காகும். கற்றவர்கள் கண்ணுடையவர், கல்லாதவர் கண்ணிருந்தும் இரண்டு புண்ணுடையவர் என கூறியுள்ளார். கல்வியின் முக்கியத்துவம் இதன் மூலம் உணர்த்தப்படுகின்றது. எல்லா நாடுகளிலும் கல்விக்குப் பெருமை அதிகம். ஆனால் எங்கள் பழைய தமிழ் நூல்களில் கல்விக்கு கொடுக்கப்பட்ட தனிப் பெருமை மிக மிக அதிகம். கல்வியறிவு இல்லாதவர்களை மிருகத்துக்கு ஒப்பிட்டார்கள் தமிழ் மக்கள். இவ்வாறான தமிழ் மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்து காணப்பட்டது யாழ் பொதுசன நூலகம்.

யாழ்ப்பாண பொதுசன நூலகம் அறிவுப்பசி கொண்டோர்க்கு உணவளிக்கும் பண்டகசாலையாக மட்டும் உருவாக்கப்படவில்லை. வயோதிபர்களுக்கான பொழுது போக்கு நிலையமாகவும், முதுமாணிப்பட்டம் பெறுவோர்க்கான உபகாரசாலையாகவும் மட்டுமல்லாமல் அமெரிக்க காங்கிரஸின் நூல் நிலையம், பிரிட்டிஷ் மியூசிய நூலகம், ஆகியவற்றைப்போல ஈழத்தவருக்கான ஒப்பற்ற தேசிய நூல் நிலையமாக விளங்கியது.

### *ஈழத் தமிழரின் கலாசாரச் சின்னம்*


ஈழத் தமிழர்களின் தன்மான உணர்வுகளினதும், தனித்துவ அடையாளங்களினதும், அறிவுத் தாகத்தினதும், விருத்தி வேட்கையினதும், சமூக வாழ்க்கையினதும், ஆன்மீக உபாசனையினதும் தெய்வீகக் குறியீடாகத் திகழ்ந்தது யாழ்ப்பாண பொதுசன நூலகமாகும். 11-11-1933 இல் உருவாகி ஒரு கொட்டிலில் தவழ்ந்து, ஒரு கடையில் எடுத்தடி வைத்து, இன்னொரு கடையில் சிறுநடை நடந்து, ஒரு வீட்டின் மாடியில் ஓடியாடித் திரிந்து, ஓர் அழகிய மாடிக் கட்டிடத்தில் ஒளிவீசி உலகப் புகழ்பெற்றது.

வண. லோங் அடிகளாரின் வேண்டுகோளின் பேரில் டாக்டர். எஸ்.ஆர்.ரங்கநாதனும், கட்டிடக் கலை நிபுணர் நரசிம்மனும் யாழ்ப்பாணம் வருகை தந்து யாழ். கோட்டை முனியப்பர் கோயிலடிப் பிரதேசத்தை நூலகம் அமைப்பதற்குப் பொருத்தமான இடமாகத் தெரிவு செய்தனர். அத்துடன் 16-10- 1953 இல் நூலகக் கட்டிட வரைபடத்தையும் தயாரித்து வழங்கினர். 29-03-1954 இல் தமிழ்ச் சம்பிரதாய முறைப்படி அடிக்கல் நாட்டப்பட்டது. 11-10-1959 அன்று நூலகத்தின் முதற் கட்டடம் பூர்த்தியாக்கப்பட்டு முதல்வர் அ.த.துரையப்பாவினால் திறந்து வைக்கப்பட்டது.

03-11-1967 இல் சிறுவர் பகுதியும் 1971 இல் கேட்போர் கூடமும் 1973 இல் நூலகத்தின் இரண்டாவது கட்டடமும் பூர்த்தியாக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. 1967 இல் யாழ்ப்பாணத்தில் இயங்கிய அமெரிக்கத் தகவல் நூலகம் இந் நூலகத்துடன் இணைக்கப்பட்டு தளபாடங்கள், ஆவணங்கள், 16 ஆ.ஆ படம் காட்டும் கருவி, 02 பணியாளர்கள் அனைத்தும் சேர்க்கப்பட்டன.

இவ்வாறு திறந்து வைக்கப்பட்ட நூலகம் 1981 ஆம் ஆண்டு வரை அரிய சேகரிப்புக்களுடன் சிறப்பாக செயற்பட்டு வந்தது. நூலகம் எரிக்கப்பட்ட போது 97,000 நூல்களும் 1000 கையெழுத்துப் பிரதிகளும் நூலகத்தில் இருந்தன. ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சர்களான காமினி திசாநாயக்காவும் சிறில் மத்தியூவும் நூலகத்திலிருந்து 200 யார் தூரத்துக்குள் இருந்த நேரம் நூலகம் எரிக்கப்பட்டது. தேடக்கிடைக்காத ஏராளமான அரிய நூல்கள் எரிந்து சாம்பராகின.

அமரர் செல்லப்பா போன்ற இந் நாட்டின் பரோபகாரிகள் தொடக்கம் யாழ்ப்பாணம் பெற்றெடுக்காத அருந்தவப்புதல்வன் வணக்கத்துக்குரிய லோங் சுவாமிகள் வரைக்கும் அரை நூற்றாண்டு காலத்தில் கட்டியெழுப்பிய கலைக்கோவில் இது. தாவீது அடிகளார் பன்மொழிப் புலவராய்ப் புகழ் பூத்தவர். அவர் நூல்களைத் தம் உயிரினும் மேலாக நேசித்தார் என்பது உண்மை: 1981 நூலகம் எரியுண்டது என்னும் செய்தியை கேட்ட மாத்திரத்திலேயே அவர் தமது இன்னுயிர் நீத்தார். யாழ்ப்பாண நூல் நிலையம் ஈழத்தமிழர் நெஞ்சங்களிலே எத்தகையதோர் உன்னத இடத்தினைப் பெற்றுள்ளது என்பதை நிறுவும் குறியீடு தான் அவர்



மரணம். யாழ்ப்பாண நூல்நிலையம் மீண்டும் பழைய மகோன்னத நிலை அடைந்து ஞானத்தேடலையே இறைவழிபாடாகத் தரிசிக்கும் ஈழத்தமிழர்கள் அச்சமின்றிச் சர்வ சுயாதீனத்துடன் அந்த ஆலயத்திலும் வழிபடும் உரித்தாளிகளாக மாறுவார்களோ என ஆவலுடன் எதிர்பார்த்திருந்த நாள் நிறைவு பெற்றுள்ளது எனறே கூறலாம்.

### *யாழ்.மாநகர சபையின் சேவை*

யாழ்.மாநகரசபை 1981 இன் பின்பு கிளைநூலகங்கள் பலவற்றை திறந்து மக்கள் சேவைக்கு அரும்பணியாற்றி வந்தது. நல்லூர், வண்ணார்பண்ணை, குருநகர், சுண்டுக்குளி என மக்கள் அருகிலேயே சென்று தமது அறிவுப்பசியை ஆற்றிக்கொள்ள வழிவகை செய்த பெருமை யாழ்.மாநகர சபையையே சாரும். இராணுவம் குடாநாட்டைக் கைப்பற்றும் வரையில் இந்த நூலகங்கள் சிறப்பான முறையில் மக்களுடைய தேவைகளை நிறைவேற்றக்கூடியவையாக செயற்பட்டு வந்தன.

1995 பிற்பகுதியில் இராணுவம் குடாநாட்டைக் கைப்பற்றிய பின்னர் கிளை நூலகங்களில் இருந்த ஆயிரக்கணக்கான நூல்கள் காணாமற் போய்விட்டன. ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியின் போது எரித்துச் சாம்பராக்கப்பட்ட நூலகத்தை மீண்டும் நிர்மாணிக்கும் பணியைப் பொதுசன ஐக்கிய அரசாங்கம் மேற்கொண்டது.

இலங்கை அரசாங்கத்தின் தபால் தந்தித் தொலைத் தொடர்பு அமைச்சரான மங்களசமரவீர அவர்களால் 14-01-1998 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் தேசிய வீடமைப்பு அதிகாரசபை கட்டிடத்தில் யாழ். நூலகத்திற்கான இடைக்கால நூலகம் திறந்து வைக்கப்பட்டது.

அமைச்சர் வெண்தாமரை இயக்கத்தின் தலைவரும் கூட. வெண்தாமரை இயக்கம் 1995 ஆம் ஆண்டு யூலை மாதம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இனங்களுக்கிடையே நல்லுறவை வளர்ப்பது இந்த இயக்கத்தின் பிரதான நோக்கம். யாழ்ப்பாண நூலகத்தை புனர்நிர்மாணம் செய்தல் தொடர்பான பணிகளையும் இந்த இயக்கமே பொறுப்பேற்றிருந்தது. இதற்காக நூலும் செங்கல்லும் என்ற ஓர் இயக்கத்தை நாடளாவிய ரீதியில் இது ஆரம்பித்திருந்தது. புத்தகம் அறிவுக்கும், செங்கல் இன ஐக்கியத்துக்குமான அத்திவாரக் குறியீடாகும். தென் கிழக்காசியாவின் மிகப் பெரிய நூலகங்களில் ஒன்று எனப் புகழ் பெற்ற யாழ்ப்பாணப் பொதுசன நூலகம் கருகிப்போய் 18 வருடங்கள். இவ்வேளையில் பழைய இடத்தில் மீண்டும் நூலகத்தைப் புனரமைக்கும் பணி ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

### *பரிகார முயற்சி*

தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநியாயங்களுக்குப் பரிகாரம் தேடும் முயற்சியில் ஒன்று தான் இது என நூலகத்தைத் திறந்து வைத்த அமைச்சர் மங்கள சமரவீர கூறியிருக்கிறார். தமிழர்களால் வரவேற்கப்பட வேண்டிய ஒருவிடயமாகத் தான் இது இன்றைய நாளில் மீண்டும் மக்கள் சேவைக்கு நவீனமயப் படுத்தப்பட்ட நூலகமாக ஆரம்பித்து இயங்க ஆரம்பித்துள்ளமை மிகப்பெரியவரப்பிரசாத மாகும். எனினும் இழக்கப்பட்ட நூல்களை யார் ஈடுசெய்வார்கள்.

புனரமைக்கப்பட்ட நூலகம் இலங்கை தேசிய நூலக ஆவணாக்கல் சபையின் ஆலோசனைப்படி துரைராஜா ஆசோசியேட்ஸ் நிறுவன திட்டமிடலில் புனரமைக்கப்பட்டுள்ளது.

இந் நூலகத்தில் உசாத்துணைப்பிரிவு, விஷேட நூற்சேர்க்கைப் பிரிவு, கணனிப்பிரிவு, வீடியோப் பிரிவு, செவிப்புலச்சாதனப்பிரிவு, இரவல் வழங்கும் பிரிவு, சிறுவர் பிரிவு, வலது குறைந்தோர்கள் படிக்கக் கூடிய பிரிவு, நூலீட்டல் பிரிவு, 80 பேர் ஒரே நேரத்தில் இருந்து அவதானிக்கக் கூடிய கேட்போர் கூடம் என்பன அமைக்கப்பட்டுள்ளன. நூலகத்தின் சில பிரிவுகள் குளிரூட்டப்பட்டடுள்ளன. இப்பிரிவுகள் யாவும் தொழிற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

தற்போது நூலகத்தில் ஏறத்தாழ 40,000 ஆயிரம் நூல்கள் பயன்பாட்டிற்கு விடப்பட்டுள்ளன. இந்நூல்களில் பெரும்பாலானவை நிறுவனங்கள், வெளிநாடுகள், நலன்விரும்பிகளால் அன்பளிப்பாக வழங்கப்பட்டவையாகும். இவை யாவும் பாடரீதியாக பகுக்கப்பட்டு, பட்டியல் படுத்தப்பட்டுள்ளதுடன் கணனி மயப்படுத்தலிற்கான வேலைகள் நடைபெற்று முடிவடையும் நிலையில் இருக்கின்றது. கணனிப்பிரிவில் 10 கணனிகள் இணையத்தள வசதியுடன் வாசகர்கள் தகவல்களைப் பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நூலக கணனிமயப்படுத்தல் வேலைத்திட்டத்தை UNESCO நிறுவனம் பொறுப்பேற்று செய்து வருகின்றது. அத்துடன் நடமாடும் நூலக சேவைக்கான வாகனத்தையும் ஏற்பாடு செய்துள்ளது. இதற்கெல்லாம் போர்ட் பவுண்டேஷன் நிறுவனம் நிதியுதவி UNESCO நிறுவனத்திற்கு செய்துள்ளது. கட்டடத் திணைக்களம் புனரமைப்பு வேலைகளைத் திறம்பட செய்து முடித்துள்ளது. நூலகத்தை சுற்றி அமைக்கப்பட்டுள்ள அழகான பூங்கா வாசகர்களை மேலும் மேலும் வாசிக்கத் தூண்டுவதாக உள்ளது.

நூலகத்தின் மூன்றாம் மாடியாக விளங்கும் பகுதி கலைக் கூடமாக மாற்றப்பட்டுள்ளது. அங்கு பிரபலமான ஓவியர் ஒருவரின் பல ஓவியங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. எதிர்பாராத தடங்கல்களினால் நூலகம் பின்னேரங்களில் மட்டுமே திறக்கப் படுகிறது. மிக விரைவில் முழு நேர சேவையை வழங்க வேண்டுமென எதிர்பார்க்கின்றோம். □

**செல்வி. சுமதி கனகரெட்னம்**
**(யாழ். பொதுசன நூலகம்)**

---

## புலிகள் மீதான தடை நீடிப்பினால் ஈழத்தமிழர்கள் விசனமடைந்துள்ளனர்

### இந்திய மத்திய உள்துறை அமைச்சர் தெரிவிப்பு

(புதுடில்லி)

விடுதலைப்புலிகள் தொடர்பில் இந்தியாவின் நிலைப்பாடுகளில் எதுவித மாற்றங்களும் இல்லை என இந்திய மத்திய உள்துறை அமைச்சர் சிவராஜ் பட்டேல் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் தற்பொழுது ஆட்சியமைத்துள்ள அரசாங்கம் புலிகள் மீதான தடையை மேலும் இரு வருடங்களுக்குக் கால நீடிப்புச்

இவ்வாறாக இந்திய அரசாங்கம் விதித்துள்ள தடை இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரம் குறித்த சமாதான முயற்சிகளிலும், தமிழர்களுக்கான அரசின் தீர்வுத் திட்டங்களிலும் பாரிய பின் விளைவுகளை உருவாக்கும் என பலராலும் கருத்து தெரிவிக்கப்படுகிறது.

ஈழத் தமிழர்களுக்கான நிரந்தரத்தீர்வுகள் குறித்த நல்லெண்ணத்தை வெளிப்படுத்தவேண்டிய இந்தியா புலிகள் மீதான தடையை

மேலும் கால நீடிப்புச் செய்துள்ளமை குறித்து ஈழத்தமிழர்கள் விசனமடைந்துள்ளனர் என மேலும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நேற்று முன்தினம் பெங்களூரில்வைத்து ஊடகங்களுக்கு வழங்கிய பேட்டியில் இதனைத் தெரிவித்துள்ள சிவராஜ் பட்டேல் இந்திய அரசின் அறிவிப்பின் பிரகாரம் புலிகள் மீதான தடை தொடர்ந்தும் அமுலில் இருக்கும் எனவும் தெரிவித்துள்ளார்.(உ-4,16)

---

## போதைப் பொருள் விற்பனைக்கு சட்டத்தரணிகள் உடந்தை

### பிரதம நீதியரசரிடம் சுட்டிக்காட்டு

பொது மக்களின் நம்பிக்கையைப் பெற்றுக் கொள்ளும் வகையில் நீதித்துறையினர் சேவையாற்ற வேண்டுமென பிரதம நீதியரசர் சரத் என் சில்வா கேட்டுள்ளார்.

பதுளையில் நேற்று முன்தினம் நடைபெற்ற நீதிபதிகள் சட்டத்தரணிகள் கலந்து கொண்ட கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில், நீதித்துறை சரிவர நீதியை வழங்காவிட்டால், மக்கள் மாற்று நடவடிக்கையைக் கையாள நேரிடும். இதனால் நாட்டில் நிலை நாட்டவேண்டிய சட்டம் ஒழுங்குகள் சீர்குலைந்துவிடும் அபாயம் இருக்கின்றது. எனவே நீதித்துறையினர் பொது மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும் வகையில் சேவையாற்ற வேண்டும் என்றார்.

இதேவேளை, கொழும்பு மாநகர சபையில் போதைப் பொருள் விற்பனை இடம் பெற்றமைக்கு சட்டத்தரணிகள் சிலர் உடைந்தையாக இருந்தனர் என்றும், இத்தகைய செயற்பாடுகள் நீதித்துறையினரின் சேவைக்கு பெரும் முட்டுக்கட்டையாக இருக்கின்றது என்றும் நீதிபதிகள் பிரதம நீதியரசரிடம் முறைப்பாடு செய்துள்ளார்கள்.(உ-60,10)

# தீவிரவாதிகள் பிரச்சினை குறையவில்லை என்கிறார் மத்திய உள்துறை அமைச்சர்

ஜம்மு - காஷ்மீரில் இந்தியா - பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் தீவிரவாதிகளின் ஊடுருவல் முற்றிலும் குறைந்தபாடில்லையென்று மத்திய உள்துறை அமைச்சர் சிவ ராஜ் பட்டேல் தெரிவித்துள்ளார்.

ஜம்மு - காஷ்மீர் தேசிய நெடுஞ் சாலையில் அண்மையில் தேசிய பாதுகாப்புப் படையினர் சென்ற வாகனத்தின் மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில், 29 பேர் உயிரிழந்த சம்பவம் பற்றிக் குறிப்பிட்ட அவர், தற்போதைய அமைதிப் பேச்சுவார்த்தைகளைக் குலைப்பதற்கான நடவடிக்கை இது என்றார்.

புதுடில்லி மருத்துவமனையில் காயமடைந்த வீரர்களைக் காணச் சென்ற அமைச்சர், இந்திய - பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் கண்காணிப்பு நடவடிக்கை தொடர்ந்து உன்னிப் பாகப் பராமரிக்கப்பட்டு வருவதாகக் கூறினார்.

இந்திய - பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் ஜம்மு - காஷ்மீரில் ஒரு சில பகுதியில் ஊடுருவல் குறைந்துள்ளது என்றும், வேறு சில இடங்களில் அது அதிகரித்துள்ளது என்றும் சிவராஜ் பட்டேல் கூறினார்.

இவர்களது ஊடுருவலை முற்றிலுமாகத் தடுத்து நிறுத்த வேண்டுமென்பதே அரசின் நோக்கம் என்று அவர் கூறினார்.

முன்னைய தேசிய ஜனநாயகக் கூட்டணியின் போது நடந்த சில விவகாரம் தொடர்பாக வெளிப் படையாக விசாரணை நடத்தப்பட வேண்டுமென்றும் கூறினார். (து)

# பா.ஜ.க. - அ.தி.மு.க. கூட்டணி பற்றி வெங்கைய நாயுடு

(சென்னை)

தமிழ் நாட்டில் அ.இ.அ.தி.மு.க. வுடனான பா.ஜ.க.வின் கூட்டணி சென்ற மக்களவைத் தேர்தலுக்கு மட்டுமே பொருந்துமென்று அக் கட்சியின் தலைவர் வெங்கைய நாயுடு தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் சென்னையில் நடைபெற்ற மாநிலச் செயற் குழுக் கூட்டத்தின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அ.இ.அ.தி.மு.க. அரசின் நல்ல செயல் களுக்கு மட்டுமே தமது கட்சி ஆதரவளிக்குமென்று கூறினார்.

தேர்தல் தோல்வியால் முதலமைச்சர் ஜெயலலிதா பதவி விலக வேண்டுமென்று எதிர்க் கட்சிகள் கூறுவது நகைப்புக்குரியது என்றார் அவர்.

கேரளா, பஞ்சாப், கர்நாடகா, மகராஷ்ட்ரா, உத்தராஞ்சல் போன்ற மாவட்டங்களில் ஆளும் காங்கிரஸ் கட்சி மக்களால் நிராகரிக்கப்பட்டுள்ளதால் அம் மாநிலங்களின் முதலமைச்சர்கள் பதவியிலிருந்து விலகுவார்களா என்று அவர் வினா வினார். (து)



மலேசியாவில் பெராக் பகுதியைச் சேர்ந்த இப்போவில் கடந்த சனிக்கிழமை 10 ஆயிரம் ஆணிகளால் வடிவமைக்கப்பட்ட அபாயகரமான மேடையில் இடைவிடாது 30 நிமிடம் நடனமாடிய இந்திய பரத நாட்டியக் கலைஞர் எஸ்.மாதவி.

# மாநில அரசின் ஊதாரித்தனமான செலவுகள் நிதி அமைச்சர் சிதம்பரம் எச்சரிக்கை

(காரக்குடி)

அடக்குமுறைச் சட்டங்களைத் திரும்பப்பெற்றதாலும், பறிக்கப் பட்ட சலுகைகளை மீண்டும் அளித்ததாலும் அ.தி.மு.க. அரசை நல்லாட்சி புரியும் அரசென்று கூற முடியாது என மத்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம் கூறியிருக்கிறார்.

மத்திய அமைச்சராகப் பொறுப் பேற்ற பிறகு முதன் முறையாகத் தமது சொந்தத் தொகுதிக்கு விஜயம் செய்த அவர், காரைக் குடியில் செய்தியாளர்களிடம் பேசினார்.

மக்களிடம் நல்ல பெயரெடுக்க முதலமைச்சர் ஜெயலலிதா நல்ல திட்டங்களைச் செயற்படுத்த வேண்டுமென்று கூறினார்.

மாநில அரசு தொடர்ந்து ஊதாரித்தனமாகச் செலவுகளை அதிகரித்து வருகிறது என்று குற்றஞ்சாட்டிய அமைச்சர் அந்த அரசிடம் ஒழுங்கான நிதிப் பராமரிப்பு இல்லை என்றார்.

சீட்டுக் கட்டிலுள்ள சீட்டுக்களைக் கலைத்து விளையாடுவது போல, ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை அடிக்கடி தமிழக அரசு மாற்றி வருவதாக அவர் குறை கூறினார்.

தேசிய அளவில் பொடா சட்டம் தேவையில்லாத சட்டம் என்றும், தற்போது நடை முறையிலுள்ள சட்டங்களைக் கொண்டே பயங்கரவாதத்தை சமாளிக்க முடியும் என்றும் சிதம்பரம் கூறினார்.

காவேரிப் பிரச்சினைக்கு இரு அரசுகளும் பேச்சுவார்த்தை நடத்துவதன் மூலம் தீர்வுகாண முடியும் என்று நம்பிக்கை தெரிவித்த அவர், தமிழ் நாட்டில் நிலவும் வரட்சி, குடிதண்ணீர் பிரச்சினைக்கு மத்திய அரசின் அணுகுமுறை அடிப்படையில் தீர்வு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுமென்று தெரிவித்தார்.

இந்தப் பிரச்சினையில் மத்திய அரசை மாநில அரசு எப்படி அணுகுகிறது என்பதைப் பொறுத்து முதலமைச்சரைச் சந்தித்துப் பேசவும் தயார் என்றார். (து)

# இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட சிறிய பயணிகள் விமானம்

தேசிய விமானக் கட்டுமான ஆய்வுக் கழகம் வடிவமைத்துள்ள "சரத்" என்ற சிறிய பயணிகள் விமானம் பெங்களூரில் நேற்று முன்தினம் வெற்றிகரமாக வெள்ளோட்டம் விடப்பட்டது.

முற்றிலும் உள் நாட்டுத் தயாரிப்பான இந்த விமானத்தின் முதல் சோதனையோட்டம் வெற்றிகரமாக நடந்ததாகக் கூறிய அந்தக் கழகத்தின் இயக்குநர் பி.ஆர். பைற் சுமார் 30 நிமிட நேரம் விண்ணில் பறந்த விமானம் நல்ல முறையில் செயற்பட்டதாகவும், பயணிகள் போக்குவரத்துக்கு இது ஏற்றது என்றும் கூறினார்.

14 இருக்கைகள் கொண்ட இந்த விமானம் தொடர்ந்து 6 மணி நேரம் விண்ணில் பறக்க வல்லது.

7500 மீற்றர் உயரத்தில் மணிக்கு 550 கி.மீ.வேகம் வரை செல்லும். 400 கி.மீ.தொலைவு வரை இதைப் பயன்படுத்தலாம்.

இந்தியாவிலேயே வடிவமைக்கப்பட்டு வெள்ளோட்டம் விடப்பட்ட சரத் சிவில் விமானப் போக்குவரத்தை பிரதமர் மன்மோகன் சிங் அடுத்த மாத இறுதியில் துவக்கி வைப்பார்.

புதுடில்லியில் மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை இணை அமைச்சர் கபில்சிவல் செய்தி நிறுவனமொன்றுக்கு அளித்த பேட்டியில் இதனைத் தெரிவித்தார்.(து)

## இந்தியச் செய்திகள்



பெங்களூரில் கடையில் வாங்கப்பட்ட வித்தியாசமான தோற்றத்துடன் காணப்பட்ட தக்காளிப் பழம்.

# அயோத்தி வழக்கில் அத்வானி நிலை மறுபரிசீலனை செய்ய நடவடிக்கை

(புதுடில்லி)

அயோத்தியில் சர்ச்சைக்குரிய கட்டடம் இடிக்கப்பட்டது தொடர்பான வழக்கில் முன்னாள் துணைப் பிரதமர் அத்வானி விடுவிக்கப்பட்டது தொடர்பாக, மீண்டும் விசாரணை நடத்தவேண்டுமென்று மத்திய அறிவியல் தொழில் நுட்ப இணையமைச்சர் கபில் சிவல் வலியுறுத்தியிருக்கிறார்.

புதுடில்லியில் பி.ரி.ஐ. செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் முந்திய தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியின் போது நிகழ்ந்த தெலங்கா விவகாரம் தொடர்பாகவும் வெளிப்படையாக விசாரணை நடத்தப்படவேண்டுமென்றும் கூறினார்.

அயோத்தி வழக்கில் சட்டம் தன் கடமையைச் செய்யும் என்றும், விசாரணையைத் திசை திருப்பியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படு மென்றும், அவர் தெரிவித்தார்.

அறிவியல் தொழில் நுட்பத் துறைக்கு தற்போது ஒதுக்கப்படும் 1000 கோடி ரூபாவை 5 மடங்காக அதிகரிக்கவேண்டுமென்று மத்திய நிதியமைச்சர் சிதம்பரத்திடம் வலியுறுத்த விரும்புவதாக கபில் சிவல் கூறினார். (து)



# காங்கிரஸ் - தேசியவாதக் காங்கிரஸ் இடையே கருத்து வேறுபாடு இல்லை

(மும்பை)

தேசிய வாதக் காங்கிரஸ் கட்சி அதன் தனித்தன்மையைப் பரா ரிக்குமென்று அக்கட்சியின் லைவரும் மத்திய வேளாண் அமைச்சருமான சரத் பவார் தெரி வித்தள்ளார்.

மும்பையில் செய்தியாளர் ளிடம் பேசிய அவர், வெளிநாட் வர் பிறப்புக் குறித்த பிரச்சினை யத் தமது கட்சி கைவிட்டு ட்டதாகக் கூறினார்.

காங்கிரஸ் கட்சிக்கும் தமது கட்சிக்குமிடையே எந்தவொரு கருத்துவேறுபாடும் இல்லையென்று கூறிய அவர், காங்கிரஸ் கட்சியுடன் தமது கட்சி இணையும் பிரச்சினை ஏதும் இப்போது இல்லை என்றார்.

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி பிரதமர் பதவியைத் துறந்தது குறித்த கேள்விக்குப் பதிலளித்த அவர், அவரது சாதாரண காரியம் அல்ல என்றும், அவரது இந்த நடவடிக்கையை வரவேற்பதாகவும் கூறினார். (து)

# வாஜ்பாய் அரசால் நியமிக்கப்பட்டவர்கள் பதவியிலிருந்து விலகக் கோரிக்கை

(புதுடில்லி)

வாஜ்பாய் அரசால் மாநில ஆளுநர் பதவிக்கு நியமிக்கப்பட்டிருந்தவர்களில் ஆர்.எஸ்.எஸ். போன்ற சங்பரிவார் அமைப்புக்களுடன் நெருங்கிய தொடர்புள்ளவர்கள் தாமாகவே முன்வந்து ஆளுநர் பதவியிலிருந்து விலகிவிட வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் பரதன் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

புதுடில்லியில் யு.என்.எஸ் செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டி ஒன்றில் வாஜ்பாய் அரசு பதவி விலகியதையடுத்து அந்த அரசால் உயர் பதவிக்கு நியமிக்கப்பட்டவர்கள் ஏற்கனவே தமது பதவிகளை ராஜிநாமா செய்ததைப் போன்று மற்றவர்களும் பதவி விலகவேண்டுமென்று கேட்டுக் கொண்டார். (து)

## சாலை விபத்தில் 9 பேர் பலி

தமிழ் நாட்டில் அண்மையில் நடந்த வெவ்வேறு வீதி விபத்துக்களில் 9 பேர் உயிரிழந்துள்ளனர். 32 பேர் காயமடைந்துள்ளனர்.

ராஜபாளையம் அருகே காரும் வானும் மோதி 4 பேர் உயிரிழந்தனர்.

கும்பகோணமருகே பேருந்து கவிழ்ந்து 3 பேரும், புதுக் கோட்டையருகே இருவரும் உயிரிழந்தனர்.

# சிவாஜியின் வீர வாளைத் தரக்கோரி பிரி. மகாராணிக்கு எதிராக நாளை மனு

மராட்டிய மாமன்னார் சத்ரபதி சிவாஜியின் வீரவாளை இந்தியாவிடம் திருப்பித் தரவேண்டும் என்று பிரிட்டிஷ் ராணி எலிசபெத்துக்கு வேண்டுகோள் விடுக்கவுள்ளார், இந்தியாவின் பிரபல முன்னணி வழக்கறிஞர் பாஸ்கர் கோர்படே.

இந்தியாவின் பாரம்பரிய கலாசாரச் செறிவைப் பிரதிபலிப்பது சத்ரபதி சிவாஜியின் வீரவாள் என்று இந்தியர்கள் கருதுகிறார்கள்.

இந்தியா குறிப்பாக மகாராஷடிர மக்களின் சார்பாக கோர்படே இது தொடர்பான மனுவை பிரிட்டிஷ் ராணி எலிசபெத்திடம் நாளை சமர்ப்பிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. இது குறித்து கோர்படே கூறியதாவது,

1875 இல் வேல்ஸ் இளவரசர் 7ஆம் எட்வேட் இந்தியா வந்தபோது அவருக்கு சிவாஜியின் வீரவாளை பரிசாக அளித்தார் அப்போதைய கோலாப்பூர் மன்னார்.

பிரிட்டனில் உள்ள பல்வேறு நாடுகளில் கலாசார பாரம்பரிய மிகக பொருள்களை கேட்டுப் பெறுவதில் சம்பந்தப்பட்ட நாடுகள் வெற்றி பெற்றுள்ளன.

வரலாற்றையும் நாட்டு மக்களின் உணர்வுகளையும் பிரதிபலிக்கக்கூடிய பாரம் பரியபொருட்களை உரிய நாடுகளிடம் திருப்பித் தரவேண்டும் என்பதை அனைத்து நாடுகளும் முக்கிய கொள்கையாக ஏற்றுக்கொண்டுள்ளன.

சத்ரபதி சிவாஜியின் வீரவாளும் அத்தகைய சிறப்பு வாய்ந்த பொருள்களுள் ஒன்று என்பதை யாரும் மறுக்க இயலாது.

சிவாஜியின் வீரவாள் தாயகத்துக்கு வந்ததும் அதை இந்திய அரசு தனது பாதுகாப்பில் வைத்திருநது பொதுமக்களின் காட்சிக்கும் வைக்கும.

சக்தி வழிபாட்டில் அதீத ஈடுபாடு கொண்ட சிவாஜியின் இஷட தெய்வமான அம்பா பவானியின் பெயராலேயே அவரது வீர வாள் பவானி வீரவாள் என அழைக்கப்பட்டு வந்தது என்றார் அவர்.

இந்திய அரசின் சார்பில் பல்வேறு வழக்குகளையும் நடத்தியவர் கோர்படே தமிழத்தைச் சேர்ந்த பத்தூர் நடராஜர் சிலை வழக்கும் அதில் ஒன்று. 10 ஆண்டுகளாகப போராடி இவ் வழக்கில் வெற்றி தேடி தந்தவர் கோர்படே. இந்த சிலை தாயகத்தை வந்தடைந்ததும் கோர்படேவுக்கு உலகெங்கிலும் பாராட்டுகள் குவிந்தமை குறிப்பிடத்தக்கது. (உ)




ஈராக்கில் சித்திரவதைக்குள்ளாகும் சிறைக்கைதிகளை உடனே விடுதலை செய்யக்கோரியும், அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படைக்கு எதிர்ப்பு தெரிவித்தும் உ.பி.மாநலம் லக்னௌவில் நேற்றுமுன்தினம் மாபெரும ஆர்ப்பாட்டப்பேரணி நடத்திய முஸ்லிம்கள்.

## அமெ. இராணுவம் மீது அடுத்தடுத்து தாக்குதல்கள்

(பக்தாத்)

ஈராக்கில் நான்கு அமெரிக்க வீரர்கள் கொல்லப் பட்டுள்ளனர் ஈராக்கில் தங்கியுள்ள அமெரிக்க இராணுவாம் மீது தீவிரவாதிகளும் முன்னாள் அதிபர் சதாம் ஹுசைனின் ஆதரவுக் கெரில்லாக்களும் அடிக்கடி தாக்குதல் நடத்துகின்றனர்.

கடந்த ஆண்டு மார்ச் முதல் தற்போது வரை இது போன்ற தாக்குதல்களில் 588 அமெரிக்க வீரர்கள் கொல்லப்பட்டுள்ளனர் இது தவிர அமெரிக்கப் படைகளுக்கு உதவியாக அந்நாட்டில் பாதுகாப்புப் பணியில் ஈடுபடடுள்ள பிரிட்டன் உள்ளிட்ட இதர நாட்டு படைகள் மீது நடத்தப்படும் தாக்குதல்களிலும் ஏராளமான வீரர்கள் கொல்லப் பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் அமெரிக்கக் கடற்படை வீரர்கள் மூன்று பேர் கொல்லப்பட்டனர் அல்-அன்பர் மாகாணத்தில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலல் இவர்கள் கொல்லப்பட்டனர்

இதேபோல் பக்தாத் அருகே கடந்த 25 ஆம் திகதி தீவிரவாதிகள் நடத்திய வெடிகுண்டுத் தாக்குதலில் அமெரிக்க வீரர் ஒருவர் கொல்லப்பட்டதாகவும் வீரர்கள் காயமடைந்ததாகவும் அமெரிக்க இராணுவம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

WORLD NEWS உலக தரிசனம்

## சிட்னி அமைதிப் பரிசு அருந்ததிராய்க்கு

(சிட்னி)

புகழ்பெற்ற நாவல் ஆசிரியையும் மனித உரிமை ஆர்வலருமான அருந்ததிராய்க்கு 2004 ஆண்டுக்கான சிட்னி அமைதி பரிசு வழங்கப்படவுள்ளது. அவுஸ்திரேலியாவிலிருந்து சர்வதேச அளவில் வழங்கப்படும் ஒரே ஒரு அமைதிப் பரிசான இதை, சிட்னி அமைதி நிறுவனம் வழங்குகிறது. ஆண்டு தோறும் இந்தப் பரிசை உலக அமைதிக்குப்பாடுபடுபவர்கள், வறுமை ஒழிப்பு உள்ளிட்ட பல்வேறு சீர்திருத்தங்களுக்காகப் போராடுபவர்கள் ஆகியோருக்கு வழங்கி இந்த நிறுவனம் கௌரவித்து வருகிறது.

2004ஆம் ஆண்டுக்கான அமைதிப் பரிசை அருந்ததி ராய்க்கு வழங்குவது குறித்து இந்த நிறுவனத்தின் சேர்மன் ஆலன்கேமரன் கருதது வெளியிடுகையில், இந்தியரான அருந்ததிராய் உலக அளவில் தனிச்சிறப்பு மிக்க குடிமகள், மிகச்சிறந்த பேச்சாளரும் கூட .மனங்களைக் கொள்ளை கொள்ளும் வகையில் கருணையுடன் எழுதும் எழுத்தாளர்.

மனித உரிமைகளுக்காக குரல கொடுப்பது. வன்முறைகளை எதிர்த்து பிரசாரம் செய்வது ஏழைகளுககும் மத வன்முறைகளில் பலியானவர்களுக்கும் ஆதரவாகக் குரல் கொடுப்பது மற்றும் நர்மதா அணை கட்டுவதால் ஏராளமான மக்கள் அகதிகளாகும் அவலத்திற்கு எதிராக குரல் கொடுத்தது. அணுஆயுதங்களைப் பயன்படுத்தக் கூடாது என்று வலியுறுத்தி பிராசம மேற்கொள்வது ஆகியவற்றிற்காக இந்த விருது அவருக்கு வழங்கப்படுகிறது எனக் குறிப்பிட்டார்.

எதிர்வரும் நவம்பர் 3ஆம் திகதி சிட்னியில் நடைபெறும் அமைதிப்பாிசு வழங்கும நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அருந்திராய் உரை நிகழ்த்தவுள்ளார்.

அருநதிராய் கடந்த 1997 ஆம் ஆண்டு தமது தி காட் ஆவ் ஸ்மால் திங்ஸ் என்ற நாவலுக்காக உலகப் பகழ்பெற்ற புக்கர் பரிசைப் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ)

# இஸ்ரேல் இராணுவத்தை பழிக்குப் பழி வாங்கப் போவதாக ஹமாஸ் போராளிகள் சூளுரை

(ரெல்அவிவ்)

ஹமாஸ் தீவிரவாத இயக்கத்தின் கொமாண்டர் உட்பட மூன்று பேர் இஸ்ரேல் இராணுவத்தின் ஏவுகணை வீச்சில் பலியாகியுள்ளனர்.

பலஸ்தீனத்தில் ஹமாஸ் தீவிரவாத இயக்கத்தின் தலைவர்களையும முக்கிய நபர்களையும் இஸ்ரேல் இராணுவம் கொன்று வருகிறது.

இதற்குப் பதிலடியாக இஸ்ரேல் இராணுவம் மீது இந்த இயக்கத்தினர் தற்கொலைப் படைத் தாக்குதலை தொடர்ந்து நடத்தி வருகின்றனர்.

ஹமாஸ் இயக்கத்தின் கொமாண்டர் நாசர் மற்றொரு தீவிரவாதியுடன் காசா நகரில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது, இஸ்ரேல் இராணுவ ஹெலிகொப்டர் அவர்களைக் குறிவைத்து ஏவுகணையை வீசியது. அதில் நாசாரும் மற்றொரு தீவிரவாதியும உடல் சிதறி இறந்தனர்.

இந்தச் சம்பவ இடத்திற்கு அருகே மற்றொரு தீவிரவாதி நடந்துசென்று கொண்டிருந்த போது, அவர் மீதும் மற்றொரு ஏவுகணையை வீசி இஸ்ரேல் இராணுவம் கொன்றது.

கடந்த 11ஆம் திகதி காசா நகரில் ஹமாஸ் தீவிரவாதிகள் கண்ணிவெடித் தாக்குதலை நடத்தி, இஸ்ரேல் இராணுவ வீரர்கள் 5 பேரைக் கொன்றனர். நாசர் தான இந்தத் தாக்குதலை முன்னின்று நடத்தினார் என்பதால் அதற்குப்பழி தீர்க்கவே அவர் மீது ஏவுகணையை வீசி இஸ்ரேல் இராணுவம் கொன் றுள்ளது.

ஹமாஸ் இயக்கத் தலைவர்களும அதன் முக்கிய கொமாண்டர்களும இஸ்ரேல் இராணுவத்தால் தொடர்ந்து கொல்லப்படுவதால் இவ்வியக்கத்தைச் சேர்ந்தவர்களிடையே கோபக்கனல் தெறிக்கிறது.

நாசர் உள்ளிட்டோரின் உடல்களின் பாகங்கள் காசா நகரில உள்ள மருத்துவ மனையில் வைக்கபபட்டபோது, அங்கு கூடிய ஹமாஸ் தீவிரவாதிகள் இஸ்ரேலுக்கு எதிராக ஆவேசமாகக கோஷமிட்டதுடன், பழிக்குப் பழி வாங்கப் போவதாகக் கத்தினர். மேலும் பலர் துப்பாக்கிகளால வானத்தை நோக்கி சுட்டு கோபத்தை வெளிப்படுத்தினர். (உ)

## அல்கெய்டாக்களால் அச்சம்
## அமெரிக்கர்களை உடன் நாடு திரும்ப தூதரகம் அவசர அழைப்பு

(வாஷிங்டன்)

சவூதி அரேபியாவில் வசித்து வரும் அமெரிக்கர்கள் அனைவரையும உடனடியாக நாடு திரும்புமாறு ஆணையிடப்பட்டுள்ளது.


அமெரிக்கர்கள் உட்பட மேற்கத்திய நாட்டினர் மீதான தாக்குதலைத் தீவிரப்படுத்தப் போவதாக அல்-கெய்டா பயங்கரவாத அமைப்பு அச்சுறுத்தல் விடுத்துள்ளது. இதையடுத்து, சவூதியில் ரியாத் நகரில் உள்ள அமெரிக்கத் தூதரகம் மேற்கண்ட ஆணையை நேற்று முன்தினம் பிறப்பித்துள்ளது.

சவூதியில் அல்-கொபார் நகரில் மேற்கத்திய நாடுகளின் 3 இலக்குகள் தாக்கப்பட்டதில் அமெரிக்கர்கள், சவூதிப் பிரஜைகள் இறந்தனர். சவூதியில் தஹ்ரானில் உள்ள அமெரிக்கத் தூதரக அலுவலகம் கடந்த மே மாதம 30 ஆம் திகதி முதல் மூடப்பபட்டு கிறது.

ஜெட்டா நகரங்களில் யு.எஸ். தூதரக அலுவலகம் வழக்கம் போல் செயற்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)



சனாவல் பலூன்களை நீளமாக ஒரு கயிற்றில் கட்டிய வாறே சைக்கிள் சவாரி செய்யும் நீன சிறுவன்.



பாகிஸ்தானின் சன்னி முஸ்லிம் மதத் தலைவராக இருந்தவர் முப்தி நிசாமதீன் சாம்சாயை நேற்று முன்தினம் அடையாளம் தெரியாத கும்பல் சுட்டுகொன்றது. இதனையடுத்து அங்கு கலவரம் வெடித்தது.

## முஸ்லிம் மதத் தலைவர் முப்தி இனந்தெரியாதோரின் சூட்டுக்கு பலி

(கராச்சி)

பாகிஸ்தானில் பிரபல சன்னி முஸ்லிம் மதத் தலைவரை அடையாளம் தெரியாத கும்பல் ஒன்று சுட்டுக் கொன்றுள்ளது.

பாகிஸ்தானில் சன்னி முஸ்லிம் மதத் தலைவராக இருந்தவர் முப்தி நிசாமுதீன். தலிபான ஆதரவாளரான இவர், ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தியதைக் கடுமையாக எதிர்த்தார்.

அமெரிக்காவுக்கு எதிராக புனிதப் போர் நடத்தவும் அழைப்பு விடுத்தவர்.

அமெரிக்கப் படைகளுக்கு எதிராகப் போரிட தங்கள் .இஸ்லாம் பள்ளியைச் சேர்நத ஆயிரக்கணக்கான ஆதரவாளர்களை ஆப்கானிஸ்தானுக்கு அனுப்பி வைகக முக்கிய காரணம் இருந்தவரும் இவரே. கராச்சியில் வசித்து வந்த இவர் நேற்று முன்தினம் காலைசொற்பொழிவு ஒன்றில் பங்கேற்க இவர் மகன் ,மெய்க்காப்பாளர்களுடன் வந்த போது அடையாளம் தெரியாத நான்கு பேர் முப்தி மீது திடீர்ரென சரமாரியாக சுட்டனர்.

இச் சம்பவத்தில் முப்தியும் அவருடைய மகன் மற்றும் மெய்காப்பாளர் ஆகியோரும் படுகாயம் அடைந்தனர்.


உடனடியாக அவர்கள் மருத்துவ மனைக்கு தூக்கிச் செல்லப்பட்டனர். அங்கு சிகிச்சை பலனளிக்காமல் முப்தி இறந்தார்.

அவர் சுடப்பட்ட செய்தியை கேள்விப்பட்டதும் அவருடைய ஆதரவாளர்கள் ஆயிரக் கணககில் மருத்துவமனை அருகே கூடி வன் முறையில் ஈடுபட்டனர். வாகனங்களுக்கும் தீ வைத்தனர்.

முப்தியை சுட்டவர்கள் கார் மற்றும் மோட்டார் சைக்கிளில் ஏறி தப்பிவிட்டனர் அவரை கொன்றவர்கள் யார் என்பது தெரியவில்லை. (உ)

ஸ்ரீராமஜெயம்

# "மிக்க வேதியன் வேதத்தின் உட்பொருள்"



**ஸ்ரீவைஷ்ணவ சமயத்தின் மூல வித்தாகிய ஸ்ரீநாராயணனின் திரு அவதாரமாகிய ஸ்ரீநம்மாழ்வார் ஜெயந்தி ~ 01.06.2004.**

கலியுகம் துவங்கி 43 ஆம் பிரமாதி வருஷம் வைகாசி மாதம் 12 ஆம் நாள் பௌர்ணமி வெள்ளிக்கிழமை கற்கடக லக்னத்தில் திருக்குடி நம்பி ஸ்ரீமந் நாராயணனின் திரு அவதாரமாகிய ஸ்ரீநம்மாழ்வார் அவதரித்தார்.

இவருடைய மூதாதையர்கள் எட்டுதலை முறைகள் திருவழுதி வளநாடர், அறந்தாங்கிய அச்சுதர், செந்தாமரைக் கண்ணர், செங்கண்ணர், பொற்காரியார், காரியார் ஆவார்கள்.

இவர்கள் எல்லோரும் ஸ்ரீநாராயணனை வழிபட்டவர்கள். இவர்களுக்கு கைமாறாக, பிராயச்சித்தமாக இக்கலியுகத்தில் நாராயணனின் திருஅவதாரமாகிய ஸ்ரீநம்மாழ்வார் 9ஆவது தலைமுறையாக காரியாருக்கும் உதயநங்கையாருக்கும் திருமகனாகப் பிறந்தார்.

ஸ்ரீநம்மாழ்வார் 16 வயது மட்டும் கண், வாய் திறவாமல் திருக்குருகூர் திருப்புளியமரத்தின் கீழ் அமர்ந்திருந்தார். இந்த நிலையில் இவருடைய கண்ணும் வாயும் திறந்தவர் ஸ்ரீமதுரகவி ஆழ்வார் ஆவார். இது இவருடைய சரித்திர வரலாறு.

ஸ்ரீநம்மாழ்வார் கண், வாய் திறந்தது முதல் வேதவாக்கியங்களைச் சொல்லத் தொடங்கினார்.

இவர் நாலு வேதங்களாகிய இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் வழியே "திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய் மொழி" முதலியவற்றை திருவாய் மலர்ந்து அருளிச் செய்திருக்கின்றார்.

இவருடைய நான்கு வேதப்பாடல்களையும் ஸ்ரீமதுரகவியாழ்வார் தனது நெஞ்சில் நிறுத்தி பின்பு வெளிப்படுத்தினார்.

ஸ்ரீமதுரகவியாழ்வார் தனது "கண்ணின்நுண் சிறுத்தாம்பு" என்ற பதிகத்தில் நம்மாழ்வாரைப் புகழ்ந்திருக்கிறார். அதில் சில பாடல்கள் எம்மையெல்லாம் பரவசமாக்குகின்றன. அதில் சில பாடல்களின் கருத்து முக்கியமானது.

"அருள் கொண்டாடும் அடியவரின் புற அருளினான் அம்மறையின் பொருள்"என்றும், "மிக்க வேதியர் வேதத்தின் உட் பொருள் நிற்கப்பாடி என் நெஞ்சில் நிறுத்தினான்" என்றும், "அன்பன் தன்னை அடைந்தவர் அன்பன்" என்றும் அமுதச் சொற்களை ஸ்ரீமதுரகவியாழ்வார் வழங்கினார்.

சைவ சமயத்திற்கு திருவாசகம், திருமுறை இருப்பதுபோல் வைஷ்ணவத்திற்கு திருவாய்மொழி, அந்தாதித்தேன் அமைந்திருக்கிறது.

சுவர்க்க வாசல் வைகுண்ட ஏகாதசியை அவரது திருவாய் மொழி 10ஆம் பத்து 9ஆவது பதிகத்தில் சூள் விசும்பு அருளியிருக்கின்றார்.

ஸ்ரீஇராமானுஜர் அவர்கள் நம்மாழ்வாரின் திருவாய் மொழியை நன்குணர்ந்து அதன் மூலம் 108 திருப்பதிகளை (வைஷ்ணவ) அமைத்த நியதி ஸ்ரீநம்மாழ்வாரையே சாரும்.

"திருமாலிருஞ்சோலை மலையே, திருப்பாற்கடலே, என் தலையே
திருமால் வைகுந்தமே, தான் திருவெங்கடமே, எனது உடலே
அருமாமாயத் தென் உயிரே, மனமே, வாக்கே, கருமமே
ஒருமா நொடியும் பிரியான் என் ஊழிமுதல்வன் ஒருவனையே" என்றும்,
"ஒருவனே உலகெல்லாம்
ஊழிதோறும் தன்னுள்ளே படைத்து காத்து கொடுத்துள்ளான்
ஆழிவண்ணன் எம்மான் அந்தண திருமாலிருஞ்சோலை
வாழி மனமே கைவிடான் திருவாய் மொழி உடலும் உயிரும் அங்க வொட்டே.

ஸ்ரீநாம்மாழ்வாருக்கு வேறு நாமங்களாவன மாறன், சடகோபன், வகுளாபரனா, பராங்குசர்.

**குறிப்பு**: *பொன்னாலை ஸ்ரீவரதராஜப்பெருமாள் ஆலயத்தின் வடபால் உள்ள புளியமரத்தின் கீழ் நம்மாழ்வார் சிலை அமைத்து வழிபட்டு வருகின்றார்கள்.*

*வண்ணை ஸ்ரீவெங்கடேசப் பெருமாள் கோவிலில் ஸ்ரீரங்கநாதர் கோபுரத்தின் கிழக்குப் பக்கதில் ஸ்ரீநம்மாழ்வார், ஸ்ரீமதுரகவி ஆழ்வார், ஸ்ரீஇராமானுஜர் ஆகியோரது சிலைகள் அமைந்துள்ளன.*

*நம்மாழ்வார் திருவடியிணையே சரணம்*
*ஓம் ஸ்ரீவேதகர்ப்பாய நமக.*

**திருமால் அடிமை திவ்ய பிரபந்த உரையாசிரியரும் திருவாய் மொழி உபாசகருமான திருவாசகமணி க.மாணிக்கவாசகர்.**

விளம்பர அனுசரணை : வி.எம்.கே. ஜுவலர்ஸ்.

## கல்வி நிலைவரம் தொடர்பில் உலக வங்கிக் குழு கலந்தாலோசனை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் விஜயம் செய்துள்ள உலக வங்கிக் குழு நேற்றுக்காலை யாழ்.மேலதிக மாகாணக் கல்விப் பணிமனையில் வைத்து யாழ். மாவட்ட கல்வி அபிவிருத்தி மற்றும் அபிவிருத்திக்கான இடையூறுகள் குறித்து கலந்தாலோசனை நடாத்தியது.

உலக வங்கியின் ஆலோசகர் ரல் றொபின்சன், பணிப்பாளர் பீற்றர் கரோல்ட் ஆகியோர் உள்ளிட்ட அறுவர் கொண்ட குழுவினரே தற்போது யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

மேலதிகமாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ். மகாலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் மேலும், உலக வங்கியின் அனுசரணையுடன் செயற்படுத்தப்படுகின்ற ஆசிய வள நிலையங்கள், கணனிப் பயிற்சி நிலையங்கள் மற்றும் ஆசிரியர் பற்றாக்குறை ஆகியன குறித்தும் ஆராயப்பட்டது.

இது தவிர இக்குழுவினர் உலக வங்கித் திட்டங்களை நேரிடையாகப் பார்வையிட்டமையும் குறிப்பிடத்தக்கது.

(உ-19)

## இலங்கையில் முதலிடுவதில் பிரிட்டன் முன்னணி

(கொழும்பு)

இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு ஐரோப்பிய நாடுகளில் பிரிட்டன் தொடர்ந்தும் முதலிடத்தை வகித்து வருவதாக பிரிட்டிஷ் உயர்ஸ்தானிகர் ஸ்ரீவன் இவோன்ஸ் தெரிவித்துள்ளார்.

வர்த்தகமன்றத்தின் 4ஆது வருடாந்த மாநாடு நேற்று மன்றத்தின் கட்டடத் தொகுதியில் நடைபெற்றபோது அதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பேசுகையிலேயே ஸ்ரீவன் இவோன்ஸ் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்,

இலங்கையில் மேற்கொள்ளப்படும் வர்த்தக மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி நடவடிக்கைகளின் அடிப்படையில் அதிக்ரித்த முதலீடுகளை இங்கு மேற்கொள்வது சாத்தியமாகும்.

அந்தளவிற்கு இலங்கையில் பொருளாதாரம் வளர்ச்சியடைந்து வருகின்றது. அத்துடன், கடந்த ஆண்டுகளை விட இவ்வாண்டில் வெளிநாட்டவர்களின் முதலீடுகள் அதிகரித்துள்ளன என்றும் தெரிவித்துள்ளார்.

(உ-60,10)

## சீவல் தொழிலாளர் தொகை நாலில் ஒன்றாக வீழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கள்ளு, பதநீர் உற்பத்திப் பணிகளில் ஈடுபடும் தொழிலாளர்களின் எண்ணிக்கையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இதனால் இங்கு கள்ளு,பதநீர் போன்றவற்றின் உற்பத்தி இப்போது பெருமளவு குறைந்துள்ளது எனத் தெரிய வருகின்றது.

யாழ்.மாவட்டத்திலுள்ள் 18 பனை,தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் சுமார் 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சீவல் தொழிலாளர்கள் கள்ளு, பதநீர் உற்பத்தியில் ஈடுபட்டிருந்தனர். இதனால் மாவட்டத்தில் கள்ளு,பதநீர் விற்பனை உச்சக் கட்டத்தில் இருந்தது. சீவல் தொழிலாளர்களின் பொருளாதார நிலையும், உழைகும் சக்தியும் அதிகரித்துக்காணப்பட்டது.

அதேவேளை, இன்றைய நிலையில் இயங்கி வருகின்ற சங்கங்களில் சுமார் 4ஆயிரம் தொழிலாளர்கள் வரையிலேயே தொழிற்படும் அங்கத்துவ நிலையில் உள்ளனர்.

இதன் காரணமாக கள்ளு, பதநீர், உற்பத்தியிலும், விற்பனையிலும் முழுமையாக தங்கியிருந்த பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் இப்போதைய நிலையில் நஷ்டமடைகின்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை, இச்சங்கங்களில் பணியாற்றிய கூட்டுறவு ஊழியர்களின் எதிர்கால நிலையும் கேள்விக்குறியாகி வருவதாக மேற்படி சங்கங்களில் பணியாற்றும் ஊழியர்களும் தெரிவித்துள்ளனர்.

(உ-16)

மீண்டும் உங்கள் வலம்புரியில்

விவாத அரங்கு

விடயம்

தொலைக்காட்சியில் தொடராக இடம் பெறும் நாடகங்களினால் யாழ்ப்பாணக் குடும்ப-சமூக கலாசார பண்பாட்டு உறவுகள்

பலப்படுகின்றது

பலவீனப்படுகின்றது

உங்கள் கருத்துக்களை

விவாத அரங்கு
வலம்புரி
இல.15, வெள்ளாந்தெரு
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு விரைவாக அனுப்பிவையுங்கள்

## கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

பூமியின் உயிர்த்திணிவில் 90 சதவீதத்திலும் அதிகமான அளவு சமுத்திரங்களிலேயே உயிர் வாழுகின்றன.

# வேலணை மேற்கு பெரியபுலம் முடிப்பிள்ளையார் ஆலய இரதோற்சவ சிறப்பு மலர் - 01.06.2004

## ஆலய பிரதம குருக்களின் ஆசியுரை

யாழ்ப்பாணம் மேற்கில் தமிழும், கல்வியும், சைவமும், புராணபடனமும் ஓங்கி விளங்கும் வேலணை மேற்கில் கோயில் கொண்டு எழுந்தருளி பக்தர்களுக்கு பிரணவ அருவமாய் காட்சி அளிக்கின்றார். இன்று தேரிலே ஆரோகணித்து அடியார்களுக்கு அருள்பாலிக்கும் பெரியபுல மஹா கணபதிப்பிள்ளையாரின் திருவருள் எல்லோருக்கும் கிடைக்க ஆசி கூறுகின்றேன்.

சிவஸ்ரீ. பா. பஞ்சாட்சரசிவாச்சாரியார்
(ஊரெழு) (சிவாகம தத்துவ நிதி)

## வாழ்வளிக்கும் முடிப்பிள்ளையார்

பழமையும், அற்புதமும், அருளும் நிறைந்த வேலணை மேற்கு பெரியபுலம் பிள்ளையார் ஆலயம் வேலணையில் சைவம் சிறப்புற மேலோங்கி நிற்க களமாக விளங்குகின்றது. நீண்டதொரு தல வரலாற்றைக் கொண்ட இக்கருவறைக் கோயிலில் 1930, 1940, 1950களில் கட்டம் கட்டமாகத் திருப்பணி வேலைகள் நடைபெற்று, 1969இல் கும்பாபிஷேகம் நடைபெற்றதுடன், 1990இல் மகா கும்பாபிஷேகம் நடைபெற்று மறைந்த பேராசிரியர் பாலச்சந்திரனால் தல வரலாற்றைச் சிறப்பாகக் கொண்ட மலரும் வெளியிடப்பட்டது.

1991இல் தீவுப்பகுதி இடம்பெயர்வுடன் கோயிற் செயற்பாடுகள் பாதிப்புக்குள்ளாயின. 1996 மீள் குடியேற்றத்தின் பின், உள்ளூர், வெளியூர், வெளிநாடுகளில் வாழும் ஊர்ப் பற்றும், இறைபக்தியும் மிக்க வேலணை மக்களின் முயற்சியால் மிகக் குறுகிய காலத்தில் கோயில் பெரும் வளர்ச்சி கண்டு வருகின்றது. வேலணை மேற்கு மக்களின் வாழ்வும், வளமும் இத்தலத்துடன் பிணைந்து காணப்படுகின்றன.

இன்று தேரேறி வரும் எல்லாம் வல்ல விக்னேஸ்வரப் பெருமானின் அருளும், ஆசியும் எம்மக்களுக்கு என்றென்றும் கிடைக்க எம்பெருமானை வணங்குவோமாக.

பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை J.P

## வரம் தரும் விநாயகர்

விநாயகப் பெருமான் விக்கினங்களைத் தீர்ப்பவர். அடியார்கட்கு வேண்டிய வரங்களை நல்குபவர். சைவத்தையும் தமிழையும் முறையாகப் போற்றிக் காக்கும் வேலணை மேற்கிலே பெரியபுலம் என்னும் திருப்பதியில் கருங்கற் கட்டடத்தில் எழுந்தருளியிருக்கும் மகாகணபதிப் பிள்ளையார் இன்று தேர் மீதமர்ந்து அடியார்க்கு கண்ணும் மனமும் கனிந்து களிக்கும்படி காட்சி தந்தருள்கின்றார். வருகிற ஆண்டில் நிகழ இருக்கும் குடமுழுக்கின் பின்னர் அழகிய புதிய சித்திரத்தேரிலே பவனி வந்து காட்சி தந்தருள இருக்கிறார்.

இந்த புராதனமான ஆலயத்தில் நாளாந்தம் நேரந் தவறாத பூஜை வழிபாடுகளுடன் ஏனைய சதுர்த்தி விழாக்கள், நவராத்திரி விழாக்கள், விநாயக சஷ்டி விரதம், பெருங்கதை படிக்கப்பட்டு தொடர்ந்து வரும் திருவெம்பாவையும் சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றன.

ஆலயத்தில் வருடந்தோறும் வைகாசி மாதத்தில் மஹோற்சவம் கொடியேற்றத்துடன் தொடங்கி தேர், தீர்த்தம் வரை ஊரே விழாக்கோலம் பூண்டு காணப்படுவதோடு, பக்திபூர்வமாக விநாயகப் பெருமானின் அருட் கடாட்சம் நிறைந்து பொலிந்து தோன்றும்.

ஐங்கரனைப் பணிந்தேத்தி, வணங்கி அவருடைய பேரருட் கருணைக்கு நாமும் பாத்திரமாகுவோமாக.

ச. இளங்கோவன்,
மாவட்ட நீதிபதி, மல்லாகம்.



## அபயமளிக்கும் முடிப்பிள்ளையார்!

சைவமும், தமிழும் அரசோச்சும் வேலணையம்பதியின் மேல்பால் பெரியபுலம் என்னும் புண்ணிய பூமியில் எழுந்தருளி அருள்பாலித்துக் கொண்டிருக்கும் விக்னேஸ்வரன் இடர் களைந்து துயர்போக்க இன்று அலங்காரத் தேரில் எழுந்தருளி வருகின்றார். ''வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுந்து வரும்'' என்பதால் அடியார்கள் 'அரஹரோகரா' என்று ஓசை எழுப்பிக் கரம் கூப்பிக் கசிந்து கண்ணீர் மல்க விநாயகனைத் தொழும் காட்சி அலாதி.

இவ்வாலயத்தில் இவ்வாண்டு திருப்பணி வேலைகள் விநாயகன் அருளினால் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கவை. முக்கியமாகக் கோபுரம், உட்பிரகார மண்டபம், மணி மண்டபம், தீர்த்தக்குளம், அழகிய சித்திரத் தேர், தேர்முட்டி, தாகசாந்தி நிலையம் என்பன குறிப்பிடக் கூடியவை. இவை எல்லாம் எதிர்வரும் மஹோற்சவத்துக்கு முன் அழகுற அமைக்கப்பட்டு எம் பெருமானுக்குக் குடமுழுக்குக் காண அடியார்கள் வேகத்துடன் செயற்படுகின்றார்கள். 1986ஆம் ஆண்டில் இருந்து இவ்வாலயத்தில் மஹோற்வ காலங்களிலும் விசேட தினங்களிலும் அன்னதானப் பணி சிறப்புற நடைபெற ஐங்கரன் அருள் பாலித்துள்ளார். இருந்த போதிலும் இக் கைங்கரியத்தைச் செவ்வனே நடாத்த ஒரு மண்டபம் இல்லாத குறையும் இவ்வாண்டு நிறைவு பெற வேண்டும் என்று விநாயகரை வணங்கி வேண்டுவதுடன், அடியார்கள் இத்திருப்பணிக்கு வாரி வழங்க விக்னேஸ்வரன் அருள்புரிய வேண்டுகின்றேன்.

தலைவர், ஐங்கரன் அன்னதான சபை.

## பெரியபுலத்தானின் பேரருள் கிடைப்பதற்கு பணிசெய்வோம்

வேலணை மேற்கு பெரியபுலம் மகாகணபதிப்பிள்ளையார் (முடிப்பிள்ளையார்) கோயில் நீண்ட வரலாற்றுப் பாரம்பரியங்களை உடையது. அந்நியர் ஆட்சியில் பல சைவக் கோயில்களின் முடிகள் அழிக்கப்பட்டபோது இவ்வாலயத்தின் முடி அழிவுக்குத் தப்பி இருந்தமையால் 'முடிப்பிள்ளையார்' என்ற நாமம் நின்று நிலைத்ததாக கர்ண பரம்பரைச் செய்திகள் கூறுகின்றன.

1991இல் ஏற்பட்ட வேலணை மக்களின் புலம்பெயர்வின் போதும், மக்கள் அனைவரும் வெளியேறிய வேளையிலும் இக்கோயிலின் நித்திய பூசைக் குருக்கள் புலம் பெயராமல் இங்கு பிள்ளையாரின் திருவருளில் தங்கி நின்றமையால் இடப்பெயர்வு காலத்திலும் எவ்வித இடையூறும் இன்றிப் பூசைகள் நடைபெற்றுவந்த வரலாற்றுப் பெருமையையும் இவ்வாலயம் தாங்கிநிற்கின்றது. முற்றிலும் கருங்கல்லினால் அமைக்கப்பட்ட இவ்வாலயம் பல செய்திகளைச் சொல்லி நிற்கிறது. தாரண வருடத்தின் மஹோற்சவம் சிறப்பாக நடைபெற்று இன்று தேர்த் திருவிழா சிறப்பாக நடைபெறுகிறது. இன்றைய பரிபாலனசபையினர் 1998ஆம் ஆண்டில் இருந்து ஆலயத்தை பரிபாலித்து வருகின்றனர். இக்காலத்தில் எம் பெருமானின் ஆலயம் புதுப்பொலிவு பெற்று வருவதுடன், பல பெரும் திருப்பணிகள் நடைபெற்று பூர்த்தி பெறும் நிலையில் உள்ளது.

பஞ்ச தள இராஜகோபுரம் நிறைவடைந்துள்ளது. முற்றிலும் வெள்ளைக் கற்களினால் நிர்மாணிக்கப்பட்ட புதிய தீர்த்தத் திருக்குளம் பூர்த்தியடைந்துள்ளது. தேர் இருப்பிடம், ஆலய வாசல் மணி மண்டபம், புதிய சித்திரத் தேர் திருப்பணி ஆகிய திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன. ஆலய வீதிகள் மண்போட்டு உயர்த்தப்பட்டு செப்பனிடப்பட்டுள்ளது. ஆலய உள்வீதி, தெற்கு, மேற்கு சுண்ணாம்புச் சுவர் அகற்றப்பட்டு புதிய சுவர் அமைக்கப்பட்டு கொட்டகை வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.

இவற்றையெல்லாம் நிறைவேற்றி அடுத்த வருடத்தில் எம் பெருமானுக்கு பெரும்சாந்தி என்று சொல்லப்படுகின்ற கும்பாபிஷேகத்தை நிறைவேற்றுவதற்கு பரிபாலனசபை எண்ணியுள்ளது. இதற்கு விநாயகப் பெருமானின் அடியவர்களின் பங்களிப்பும், ஆதரவும் பெரிதும் தேவையாக உள்ளது. பெரியபுலத்தானின் பேரருள் எல்லோருக்கும் கிடைத்து, எல்லோருக்கும் எல்லாமும் கிடைத்து பெருவாழ்வு காணவும், எமக்கு சாந்தியும் சமாதானமும் கிடைத்து அமைதியாக, மகிழ்ச்சியாக வாழ்வும் விநாயகப் பெருமான் நல்லருள் புரியவேண்டும் என்று எம் பெருமானின் பாதார விந்தங்களைப் பணிந்து வணங்குகின்றேன்.

பொ. அருணகிரிநாதன்
தலைவர்,
பரிபாலன சபை,
பெரியபுலம் மகா கணபதிப்பிள்ளையார் கோயில்.
தொலைபேசி: 021-4590840

## திருவருள் கிடைக்கப் பிரார்த்திப்போம்

வேலணை மேற்கு பெரிய புலம் மகா கணபதிப்பிள்ளையார் கோயில் கர்ப்பக்கிருகம் முதல் தம்பமண்டபம் வரை கருங்கறகளால் 1948ஆம் ஆண்டிலேயே கட்டிமுடிக்கப்பெற்று, அவ்வாண்டிலேயே ஊரெழு பிரதிஷ்டா பூஷணம் சிவஸ்ரீ கு. பாலசுந்தரக் குருக்கள் அவர்களால் முதற் கும்பாபிஷேகம் நிறைவாகச்செய்யப்பெற்றது.

பெரியபுலம் மகா கணபதிப்பிள்ளையார் கோயில் மூலவர் மிகப்பழமை வாய்ந்தவர். ஆதியில் ஓலைக் கொட்டிலில் வைத்து வரணி கரணவாய் ஆதினம் சைவக்குருக்கள் பால் தீட்சைபெற்ற சைவானுட்டானங்களில் தவறாத ஆசாரசீல சைவர்களே பூசை செய்து வழிபாடியியற்றினர். கருங்கற் திருப்பணி வேலைகளைச் செய்து புதிய கோயில் கட்டும் காலத்திலே அனலைதீவைச் சேர்ந்த வேதையர் எனப்படுபவர் அர்ச்சகராக முதன்முதலில் கடமையாற்ற ஆரம்பித்தார்.

இக்கோயிலை எல்லோரும் "முடிப்பிள்ளையார் கோயில" என்றே அழைப்பது வழக்கம். குன்றின் முடிபோல் வேலணைக்கு முடியாக விளங்கும் "பெரிய புலம" என்ற இடத்தில் அமைந்தமையால் அப்பெயர் வழங்கிற்றெனலாம். மேலும், வேலணையின் தலையாய தலமாகக் கருதியும் அப்பெயர் வழங்கப்பட்டிருக்கலாம்.

அக்காலத்தில் வேலணை மேற்கூரில் பெரியபுலம் மகா கணபதிப்பிள்ளையார் கோயிலைச் சூழ்ந்து சைவாசார சீலரான சிவ பூசாதுரந்தர்கள் வாழ்ந்து வந்தனர். கோயில்களில் தேவாரப் பண்ணிசையும், புராணபடனங்களும் தவறாது நடை பெற்றன.

சைவப்பெரியார்கள் பலர் ஒன்றுசேர்ந்து இவ்வாலயத்தினை கருங்கற்றிருப்பணியால் சிறப்புறச்செய்து வருடாந்த மஹோற்சவத்தையும் ஆரம்பித்து வைத்தனர். அந்தக் காலத்தில் பிடி அரிசி சேர்த்தும் திருவோடு விற்றும், வணிகப் பெருமக்களின் பண உதவிகளினாலும் மெல்ல மெல்ல கோயிற் திருப்பணிகள் நடந்தன. கால ஓட்டத்திலே பரிவார மூர்த்திகளும் பிரகார கூரையும் அமைக்கப்பெற்றதுடன், தேர்த் திருவிழா உபயகாரர்களினால் கட்டுத்தேரும் செய்யப்பெற்று வளர்ச்சி கண்டது. இராஜ கோபுரத்திற்காய அடித்தளமும் இடப்பட்டது. கண்டா மணிக் கோபுரமும் மணியுடன் இருபுறமும் அமைந்தது. நாட்டில் ஏற்பட்ட அரசியல் இனப்பிரச்சினைகள் இவ்வூர் மக்களை இடம்பெயர்வுக்கு உட்படுத்தியது. யாழ். குடா நாட்டு மக்கள் இடம்பெயர்ந்து செல்ல ஆலயங்களில் பூசை முறைகளும் நடவாதொழிந்தன. ஆயின், வேலணை மேற்கு பெரியபுலம் மகா கணபதிப் பிள்ளையாருக்கு நாடோறும் பூசை நடைபெற்றது. அதற்கு உரியவராக கோயில் அர்ச்சகர் பிரம்மஸ்ரீ சோமாஸ்கந்தக்குருக்கள் விளங்கினார். எம்மூர் மக்கள் பலர் வெளிநாடுகளுக்கு இடம் பெயர்ந்தனர். அவர்கள் அங்குசென்று உழைத்து வாழ்ந்தாலும் சொந்த மண்ணையும் தம்குல தெய்வத்தையும் மறவாதுள்ளமையாலும் இக்கால கட்டத்தில் கோயில் பரிபாலனசபை திறம்பட கருமம் ஆற்றுவதாலும் தற்போது இக்கோயில் இராஜகோபுரத் திருப்பணி நிறைவுறும் நிலையிலும் சித்திரத் தேர் குறிப்பிடத்தக்களவு வேலைகள் நடைபெற்று வருவதும், தேர்முட்டி வேலை, ஆலய முகப்பு மணிமண்டப வேலை ஓரளவு நிறைவு செய்யப் பட்டும் இருப்பதை யாவரும் காண்கின்றனர். அன்பர்களும் அடியார்களும் ஆலய திருப்பணி வேலைகளில் தனித்தும் சேர்ந்தும் பொதுவாகவும் தங்களால் இயன்றதைச் செய்தும் வருகின்றனர். இடப்பெயர்வினால் குடிசனச் செறிவு குறைந்தாலும் திருவிழா, விசேட நாட்களில் எங்கிருந் தாலும் ஊரவர்கள் ஒன்றுகூடி பெரியபுல ஐங்கரனை வழிபட வந்திடுவர். இவ்வாண்டு மஹோற்சவசத்தின் சிறப்பான தேர்த்திருவிழாவினைக் கண்டுகளிக்க வந்திருக்கும் அடி யார்களுக்கும் ஏனையோருக்கும் மகா கணபதிப்பிள்ளை யாரின் திருவருள் கிடைக்கப் பிரார்த்திப்போமாக!

சைவப் புலவர் மு. திருஞானசம்பந்தபிள்ளை.

JAFFNA HARDWARES
யாழ்ப்பாண இரும்பகம்
Dealers in Hardwares, Building Materials, Cements, Paints and Electrical Goods.
No: 32, Stanley Road, Jaffna. T.P. 222 5589, 222 7028
இல: 32, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

மாற்றுக் குறையா தங்க நகைகளைக் குறித்த நேரத்தில் செய்து கொடுப்பதில் இருபத்தோராம் நூற்றாண்டின் இணையற்ற ஸ்தாபனம்
விக்னேஸ்வரா நகைப் பூங்கா
205/3 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 021-4590022.
விக்னேஸ்வரா நகைப் பூங்கா
34D, 10B கந்தசாமி கோவில் வீதி, வவுனியா.
T.P. 024-2221910, 024-221857.
விக்னேஸ்வரா நகைப் பூங்கா
இல: 45, காலி வீதி வெள்ளவத்தை, கொழும்பு-06.
T.P. 011-2559535.

எம்மிடம் சகலவிதமான மின்சார, தொழில்சார் கருவிகள், கட்டடப் பொருட்கள், விவசாய உள்ளீடுகள் போன்றவற்றை நியாய விலைகளில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்.
NANDALALA HARDWARES
29, Stanley Road, Jaffna.

நதீபா நகைமாடம்
இல: 2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
கிளை1 :
நதீபா நகைமாடம்
இல: 99, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
கிளை2 :
கவுசன் நகைமாடம்
இல: 129, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
கிளை3 :
நதீபா நகைமாடம்
இல: 149, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



# ஆரோக்கியமான வாழ்க்கை முறையினால்

**மாரடைப்பு ஏற்படுவதைத் தடுப்பதற்கும் இருதய நோய்களிலிருந்து விடுபடவும் இராஜயோகப் பயிற்சி மிகவும் அவசியமானது என வைத்திய நிபுணர் சதீஸ் குமாரகுப்தா ஆய்வுகள் மூலம் கண்டறிந்த உண்மைகள் கட்டுரை வடிவில் வலம்புரியில் வெளியாகிவருகின்றன. அக்கட்டுரையின் மூன்றாம் பகுதி இன்று வெளியாகிறது.**

இந்த ஆரோக்கியமான வாழ்க்கை முறைத் திட்டத்தில் நடுத்தரமான, கடுமையான இருதய நோயுடையவர்கள் பங்குபற்றினார்கள். மீண்டும் இரண்டு வருடங்களின் பின் அஞ்சியோ பிளாஸ்டி சிகிச்சைக்கு உட்படுத்த வேண்டிய நோயாளிகள், அஞ்சியோ பிளாஸ்டி அல்லது சத்திர சிகிச்சை முறையை விரும்பாத நோயாளிகள் மற்றும் கடுமையான அடைப்பு காரணமாக இந்த சிகிச்சை முறைகளுக்குப் பொருந்தாத நோயாளிகள் எனப் பல் தரப்பட்டவர்களும் இதில் கலந்து கொண்டார்கள். யார், யார் இதில் கலந்துகொள்ள விரும்பினார்களோ எல்லோரும் ஏற்றுக் கொள்ளப்பட்டார்கள். திறந்த நிகழ்ச்சித்திட்டமாக **(open trial)** அமைந்தது.

நோயாளிக்கு இருதய நோய் சம்பந்தமான சகல விடயங்களும் கூறப்பட்டது. எவ்வாறு இந்த இருதய முடியுரு நாடிகளில் ஏற்பட்டுள்ள அடைப்பை விரிவடையச் செய்யலாம் என்றும் கூறப்பட்டது. 123 நோயாளிகள் ஒவ்வொரு 6 மாதகாலத்துக்குப்பின் அழைக்கப்பட்டு இது சம்பந்தமாக ஆராயப்பட்டனர். 2 வருடங்களின் பின் அவர்கள் மீண்டும் ஒரு முறை அஞ்சியோகிராப் **(angiography)** என்ற விஷேச சோதனைக்கு உட்படுத்தப்பட்டார்கள். இதன் மூலம் இந்த அடைப்புகள் மீண்டும் திறந்துள்ளனவா? இல்லையா? என பார்க்க முடியும்.

இதுவரை யாராலும் எந்த ஒரு தியான முறையாலும் மற்றும் மருந்துகளாலும் கூட 1-2 வீதத்தைத் தவிர இந்த அடைப்புகளைத் திறக்கமுடியாதிருந்தது.

### இராஜயோக தியானப் பயிற்சி

1998 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த ஆராய்ச்சித் திட்டத்தில் உடற்பயிற்சி, குறைந்த கொலஸ்ரோல் அதிக நார்ப் பொருள் கொண்ட உணவுப் பதட்டத்திலிருந்து விடுபட இராஜயோகத் தியானப் பயிற்சி போன்றன பயன்படுத்தப்பட்டன. கொலஸ்ரோலைக் குறைக்கின்ற மருந்து வகைகள் பயன் படுத்தப்படவில்லை. உடலில் ஏற்படுகின்ற பல மாற்றங்கள் அவ தானிக்கப்பட்டு அளவிடப்பட்டன. கொலஸ்ரோல் மட்டங்களில் ஏற்படுகின்ற மாற்றம் இதயத் துடிப்பு, குருதி அழுத்தம், நீரிழிவு நோய், ஓமோனகள் போன்றவற்றில் ஏற்படுகின்ற மாற்றங்கள் அவதானிக்கப்பட்டு அளவிடப்பட்டன. எவ்வளவு தூரம இருதய நாடிகளின் அடைப்புக்கள் திறந்து கொள்கின்றன என்பது அவதானிக்கப்பட்டது. இதில் கலந்து கொண்டவர்கள் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டார்கள். இது ஒரு மேல் எழுந்த வாரியான கட்டுப்பாட்டைக் கொண்ட ஆராய்ச்சியாகும்.

### முதலாவது பிரிவு
### (interp entiongroup)

இது ஆரோக்கியமான வாழ்க்கை முறைப் பிரிவாகும். இவர்களுக்கு மன அழுத்தம் பதட்டத்தில் இருந்து விடுபடுவதற்கு இராஜயோக தியானம் கற்றுக் கொடுககப்பட்டது. குறைந்த கொலஸ்ரோல், அதிக நார்ப் பொருள் கொண்ட உணவு, சூழலில் ஒட்சிசன் கூடுதலாக உள்ள நேரத்தில், உடற் பயிற்சி செய்தல், அதாவது காலையில் சூரிய உதயத்தோடு விரைவாக நடக்கின்ற பயிற்சி, மாலையில் நடக்கின்ற பயிற்சி போன்ற அறிவுரைகள் வழங்கப்பட்டன. 112 நோயாளிகள் இதில் பங்கு பற்றினார்கள்.

### இரண்டாவது பிரிவு
### (control group)

இரண்டாவது பிரிவானது கட்டுப்பாட்டுப் பிரிவாகும். **(control group)** 105 நோயாளிகள் இதில் கலந்து கொண்டார்கள். முதலாவது பிரிவினரைப் போன்றே ஒரே மாதிரியான உணவு, உடற் பயிற்சி, மருந்துகள் வழங்கப்பட்டன. இராஜயோகத் தியானத்தின் மூலம் மனப்பதட்டம் அல்லது அழுத்தத்தில் இருந்து விடுபடுவதற்கான பயிற்சி வழங்கப்படவில்லை. ஆனால் அவர்களுக்கு மனப்பதட்டம், அழுத்தம் நல்லது அல்ல என்றும் அவசரப்படுகின்ற சுபா வம், 'ஏ' பிரிவைச் சேர்ந்த நடத்தை, மனத்தளர்வு, கவலை, கோபம், வேலைப்பளு, குடும்ப அழுத்தம் போன்றன நல்லது அல்ல. இவற்றி னால் இருதய நோய் அதிகரிக்கும் என்றும் கூறப்பட்டது.

# இருதய நோய்களைக் குணப்படுத்தலாம்

அவர்கள் இவற்றை வெற்றி கொள்வதற்கு என்ன முறைகளைப் பின்பற்றுகின்றார்களோ, அவற்றைத் தொடர்ந்தும் செய்யும் படி கூறப்பட்டது. உதாரணமாக பிரார்த்தனை செய்பவர்களுக்குத் தொடர்ந்தும் அனைச்செய்யுமாறு கூறப்பட்டது. 'விபசன' தியானம், பிராணாயாம், யோகாசனம், செய்பவர்களுக்குத் தொடர்ந்தும் அதைச் செய்யும் படி கூறப்பட்டது. ஆனால் கோபம் போன்ற எதிர்மறையான குணங்களை, எதிர்மறையான பழக்கங்களை மாற்றிக்கொள்ளுமாறு கூறப்பட்டது. எந்த ஒரு நோயாளியும் எப்போதாவது 'அஞ்சியோ பிளாஸ்டி' அல்லது **(by pass)** சத்திரசிகிச்சைக்கு உட்பட விரும்பினால் அதைச் செய்து கொள்ளும் சுதந்திரம் வழங்கப்பட்டது. ஆனால் முதலே அதைப்பற்றி அறிவிக்கும் படி கேட்டுக்கொள்ளப்பட்டார்கள்.

இரண்டு பிரிவைச் சேர்ந்தவர்களும் ஏறத்தாழ இராஜயோகத் தியானத்தின் மூலம் மன அழுத்தம், பதட்டத்தில் இருந்து விடுபடுகின்ற முறையைத் தவிர ஏனைய அனைத்திலும் சமமானவர்களாகக் காணப்பட்டார்கள். பதட்டம் அல்லது அழுத்தம் என்பது மாற்றங்களின் போது ஏற்படுகின்ற மறு தாக்கமாகும். அழுத்தத்திற்கும், உள்சக்திக்கும் இடையே உள்ள வீதமானது ஒன்றிலும் பார்க்கக் கூடும் போது ஒருவர் மன அழுத்தத்தை உணர்கின்றார். அழுத்தமானது உள் அழுத்தமாகவோ அல்லது வெளி அழுத்தமாகவோ இருக்கலாம். உள் அழுத்தமானது எதற்கும் பயப்படுவது, கவலைப்படுவது, எதிர்பார்ப்பது போன்ற எமது சொந்த அகப் பழக்கத்தால் ஏற்படுகின்றது.

வெளி அழுத்தமானது எமக்கோ அல்லது குடும்பத்தில் ஒருவருக்கோ நோய் ஏற்படும் போது, வேலை செய்யும் இடத்தில் பிரச்சினைகள் ஏற்படும் போது, நாட்டில் போர் நடக்கும் போது இப்படிப்பட்ட புறக்காரணிகளால் ஏற்படுகின்றது. இவற்றை எம்மால் மாற்ற முடியாது. ஆனால் ஒரு விடயம் உங்கள் கைகளில் இருக்கின்றது. அதுதான் உள் சக்தி. உங்களுடைய உள்சக்தி நீங்கள் கூட்டிக் கொண்டால் எந்தவொரு அழுத்தமும், அழுத்தமாக இருக்காது. உள் சக்தி பலமாகும் போது எந்தவொரு அழுத்தத்தையும் நீங்கள் உணர மாட்டீர்கள். எப்போதும் உயர்வாக இருக்கப் பழகிக் கொள்ளுங்கள். அக உணர்வில் அதாவது ஆத்ம உணர்வில் இருப்பதாகும். நாங்கள் இந்த சரீரத்திலே இருந்து ஒரு பாகத்தை நடிக்கின்ற ஆத்மாக்கள். நான் ஓர் ஆத்மா, இந்த உடலின் அதிபதி. சரீரம் என்ற உணர்விலோ அல்லது நீங்கள் நடிக்கின்ற பாகத்தின் உணர்விலோ இருப்பது நல்லது அல்ல.

உதாரணமாக நான் ஒரு வைத்தியர். ஆனால் நான் ஒரு வைத்தியராகவே பிறப்பெடுத்தேனா? சிலர் தாங்கள் ஓர் தாய் என்று சொல்கின்றார்கள். நீங்கள் ஒரு தாயாகவே பிறந்தீர்களா? இவை எல்லாம் நாங்கள் நடிக்கின்ற பாகங்களாகும். ஆனால் நாம் அதிக அளவு நாம் நடிக்கின்ற பாகத்தின் உணர்வில் இருப்பதால், எம்மைப் பாரமாக்கிக் கொள்வதோடு அழுதத்திற்கு உட்படுகின்றோம்.

உதாரணமாக வைத்திய சாலையில் வேலை செய்யும் போது நான் ஓர் வைத்தியர் என்ற பாகத்தை 6 மணித்தியாலங்களுக்கு நடிக்கின்றேன். மற்ற நேரங்களில் வீட்டில் இருக்கும் போது ஓர் கணவராக, தந்தையாக, சிலருக்கு ஓர் நண்பனாக பல பாகங்களை நடிக்கின்றேன். நான் ஓர் உயிர், ஆத்மா நானே பல பாகங்களை இந்த சரீரம் மூலம் நடிக்கின்ற போதும் அந்தப் பாகத்தில் இருந்து நான் வேறுபட்டவனாக இருக்கின்றேன். நான் ஓர் ஆத்மா, என்னுடைய இயற்கைக் குணம் அமைதியாகும். நான் ஓர் அமைதியான, தூய்மையான, அன்பான, சந்தோஷமான, ஞானம் நிறைந்த, சக்திவாய்ந்த, பேரானந்தம் மிக்க ஆத்மா. எனவே ஆத்ம உணர்வில் சொந்தக் குணங்களின் அனுபவத்தில் இயல்பாக இருங்கள்.

### இயற்கை உணவு அவசியம்


இயறகை உணவை உண்ணப் பழகிக் கொள்ளுங்கள், கொலஸ்ரோல் குறைவான நார்ப்பொருட்கள் கூடுதலாக உள்ள புதிய தாவர உணவை, சரியான நேரத்தில் உண்ணுங்கள் எதை உண்ணுவது, எப்போது உண்ணுவது. எப்படி உண்ணுவது போன்ற மூன்று விடயங்களும் முக்கியமாகும். இயற்கையின் மடியில் இருக்கப் பழகிக்கொள்ளுங்கள். அதாவது சூரிய உதயத்தின் போது காலை நேரத்தில் அரை மணித்தியாலத்திற்கு விரைவாக நடக்கின்ற பயிற்சியைச் செய்யுங்கள். விரைவு நடை என்றால் ஓர் நிமிடத்தில் 110 அடிகள் நடக்கவேண்டும். பின் சூரிய அஸ்தமனத்தின் போது மாலை நேரத்திலும் ஓர் நிமிடத்துக்கு 90 அடிகள் என்ற விகிதத்தில் அரை மணித்தியாலம் நடக்கின்ற பயிற்சியைச் செய்யவேண்டும். இந்த நேரங்களில் தாவரங்களின் உணவுத் தொகுப்பு கூடுதலாக நடைபெறுவதால், சூழலில் அதிகளவு ஒட்சிசன் காணப்படும். அவை எமக்கு அவசியமானவையாகும். இப்படி நடக்கின்ற உடற்பயிற்சி செய்யும் போது உடலில் உள்ள நச்சுப்பதார்த்தங்கள் கழுவப்படுகின்றன. இரவில் சூழலில் காபனீர்ரெட்சைட்டு ($co_2$) என்ற வாயு கூடுதலாகக் காணப்படுவதால் இரவில் நடப்பது நல்லது அல்ல.

அஞ்சியோ கிரபி **(angiography)** சோதனையானது இந்த ஆராய்ச்சிக்கு முன்பும், பின்பும் செய்யப்பட்டது. எந்த அஞ்சியோ கிரபி எவருடையது என்றோ அல்லது எது முதல் செய்யப்பட்டது என்றோ யாரும் அறியாத வகையில் ஓர் இலக்கமிடப்பட்டு செய்யப்பட்டன இவை. மூன்று சுதந்திரமான நிபுணர்களால் ஆராயப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. புள்ளி விபரவியல் இன்னொரு சுதந்திரமான நபரினால் மேற்கொள்ளப்பட்டது. எந்தவொரு பாரபட்சமுமின்றி இந்த ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது.

இரு பிரிவைச் சேர்ந்த நோயாளிகளில் 80 வீதமானோர் இரண்டு அல்லது மூன்று நாடிகளில் அடைப்பு உள்ளவர்களாகக் காணப்பட்டார்கள். அதாவது 80 வீதமானோர், கடுமையான இருதய நோய் உடையவர்களாகவும் **(by pass)** சத்திர சிகிச்சைக்கு உட்படவேண்டிய நிர்ப்பந்தம் உடையவர்களாகவும் இருந்தனர். 20 வீதமானவர்கள் ஒரு நாடியில் மட்டும் அடைப்புடையவர்களாக இருந்தனர். 95 வீதமானவர்கள் இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் ஆர்வமாகக் கலந்து கொண்டார்கள்.

நோயாளிகளுக்கு இந்த முடியுரு நாடிகளில் ஏற்படுகின்ற அடைப்பானது கடந்த 40 வருட காலமாக படிப்படியாக ஏற்பட்ட ஒன்று என்றும், இந்த நிகழ்ச்சித் திட்டத்தை 50 வீதம் மாத்திரம் பின்பற்றினால் எந்த மாற்றமும் ஏற்படாது என்றும் கூறப்பட்டது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தை 60 வீதம் மாத்திரம் பின்பற்றினால் 20 வீத முன்னேற்றமும் 70 வீதம் பின்பற்றினால் 40 வீத முன்னேற்றமும், 80 வீதம் பின்பற்றினால் 60 வீத முன்னேற்றமும், 90 வீதம் பின்பற்றினால் 80 வீத முன்னேற்றமும், 100 வீதம் பின்பற்றினால் 100 வீத முன்னேற்றமும் ஏற்படும் என நோயாளிகளுக்குக் கூறப்பட்டது. இதில் பங்கு பற்றிய சராசரி நோயாளிகள் 50-100 m கூட நடக்க முடியாதவர்களாக இருந்தார்கள். ஆனால் இந்த நிகழ்ச்சியில் பங்கு பற்றி 7 நாட்களுக்குள்ளேயே 1km அல்லது 2km தூரம் நடக்க முடிந்தது. ஓர் வருடத்தில் 3 - 5 km தூரம் நடக்கக் கூடியவர்களாக இருந்தார்கள். எந்தவித நெஞ்சு வலியோ முச்சுத்திணறலோ, மேலதிக மருந்துகளோ இன்றி இதை அவர்களால் செய்ய முடிந்தது. ஆனால் கட்டுப்பாட்டுப் பிரிவைச் சேர்ந்தவர்கள் அதாவது இராஜயோக தியானப் பயிற்சிக்கு உட்படாதவர்களிலும் முன்னேற்றம் காணப்பட்ட போதிலும் அது மிகக்குறைவாகவே இருந்தது.

மருந்துகளைப் பொறுத்தவரை முதலாவது பிரிவைச் சேர்ந்த அதாவது ஆரோக்கியமான வாழ்க்கை முறை, இராஜயோக தியானப் பயிற்சியை பின்பற்றியவர்கள் சராசரியாக 5.31 எண்ணிக்கையைக் கொண்ட மாத்திரைகளை எடுப்பவர்களாக இருந்தார்கள். 7 நாட்களில் அவர்களுக்குத் தேவையான மாத்திரைகளின் எண்ணிக்கை இரண்டிலும் குறைவாகக் காணப்பட்டது. ஒரு வருடத்தில் அது 1.41 ஆக மேலும் குறைந்தது. ஆனால் இரண்டாவது பிரிவை அதாவது கட்டுப்பாட்டுப் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு தேவையான மாத்திரைகளின் சராசரி எண்ணிக்கை 4.97 ஆக ஆரம்பத்தில் இருந்தது. ஆனால்



பின்னர் அவர்கள் பயன்படுத்தும் மாத்திரைகளின் அளவைக் குறைக்க முடியாது இருந்ததோடு மேலும் கூடுதலான மாத்திரைகள் தேவைப்பட்டன.

இதயத்தில் இரத்தத்தைப் பாச்சுகின்ற சக்தியானது 44 வீதத்தில் இருந்து 49 வீதமாக முதலாவது பிரிவைச் சேர்ந்தவர்களில் அதிகரித்திருந்தது. ஆனால் கட்டுப்பாட்டுப் பிரிவை அதாவது இரண்டாவது பிரிவைச் சேர்ந்தவர்களில் இது குறைந்திருந்தது. ஆரோக்கியமான வாழ்க்கை முறை நிகழ்ச்சியை அதாவது இராஜயோக தியானப் பயிற்சியைப் பின்பற்றிய முதலாவது பிரிவைச் சேர்ந்தவர்கள் அவர்களுக்குக் கூறப்பட்ட அறிவுரைகளை எல்லாம் மிக நன்றாகப் பின்பற்றினார்கள். உணவைப் பொறுத்தவரை 75 வீதத்திற்கு மேலாகக் கூறப்பட்ட உணவுகளை மாத்திரமே பயன்படுத்தினார்கள். உடற்பயிற்சியை 71 வீதத்திற்கு மேலாகப் பின்பற்றினார்கள். ஆகவே இவர்களின் கொலஸ்ரோல் மட்டமானது 228 இல் இருந்த 172 ஆகக் குறைந்தது. அதாவது ஏறத்தாழ 25 வீதக் குறைவு காணப்பட்டது. ஆனால் கட்டுப்பாட்டுப் பிரிவைச சேர்ந்தவர்களில் கொலஸரோல் அதிகரித்து இருந்தது.

முதலாவது பிரிவைச் சேர்ந்தவர்களின் மனது குளிர்மையாக இருந்ததால், கெட்ட கொலஸ்ரோலின் அளவு 14 வீதத்தில் குறைந்திருந்தது. ஆனால் கட்டுப்பாட்டுப் பிரிவைச் சேர்ந்தவர்களின் மனது சூடாக இருந்ததால், கெட்ட கொலஸ்ரோல் அதிகரித்திருந்தது. முதலாவது பிரிவினரின் நல்ல கொலஸ்ரோல் 11 வீதத்தால் அதிகரித்து இருந்தது. ஆனால் கட்டுப்பாட்டுப் பிரிவைச் சேர்ந்தவர்களில் இதில் எந்த மாற்றமும் இல்லை. அதே நேரத்தில் 'ட்ரை கிளிசரை' **(triglycerbide)** எனப்படுகின்ற கொழுப்பு 31 வீதமாக முதலாவது பிரிவினரில் குறைந்திருந்தது.

இந்த முறை மூலம் ஒரே தடவையில் நல்ல கொலஸ்ரோலின் அளவைக் கூட்டிக் கொள்வதோடு, கெட்ட கொலஸ்ரோல், ட்ரை கிளிசரை' என்பவற்றைக் குறைத்துக்கொள்ளலாம்.

இந்த ஆரோக்கிய வாழ்க்கை முறையை அதாவது இராஜயோகத் தியானப் பயிற்சியைப் பின்பற்றியவர்களின் 'ஏ' வகையைச் சேர்ந்த நடத்தையில் கணிசமான அளவு குறைவு காணப்பட்டது.

(தொடரும்)

## இன்று ஒரு தகவல்

# மனச்சாட்சி

தூயமனச்சாட்சி இதயத்தை மகிழ்ச்சியாலும், திருப்தியாலும், நிரம்பி வழியச் செய்கின்றது என்கிறார் தாமஸ் ஏ.கெம்பிஸ் எனும் இறையடியார்.

மனச்சாட்சி என்ற பெயரால் இதயத்தில் ஒளி வீசும் அந்த விண் சுடரை எப்பாடுபட்டாவது அணையாமல் பாதுகாருங்கள் என்கிறார் மற்றும் ஒரு அறிஞர்.

ஒவ்வொரு காரியத்திலும் மனச்சாட்சியோடு [illegible] படாத மனிதனை ஒன்றிலும் நம்பாதீர்கள் என்கிறார் லாரனஸ் ஸ்டர்ன் என்ற மேல்நாட்டு அறிஞர். மனச்சாட்சியின் குரல் உரத்துத் தொனிக்கும் போது, எனது ஆதிக்கம் முடிவடைகிறது என்கிறார் நெப்போலியன்.

உலகத்தில் நரகம் என்று ஒன்று இருக்குமானால், அது குற்றமுள்ள மனச்சாட்சியாகத்தான் இருக்க வேணடும். தூய மனச்சாட்சியைப் போன்ற மென்மையான தலையணை கிடையவே கிடையாது. தூய மனச்சாட்சி நமக்கு சுகமான நித்திரையை அருளுகின்றது.

தூய மனச்சாட்சியானது ஒரு காரியத்தை நாம் செய்ய ஆரம்பிக்கும் போது "இது சரிதானா?" என்று வினவுகிறது.

இறைவன் நமக்குத் தந்த இயற்கை மருத்துவர் தெளிவான மனச்சாட்சியேயாகும்.

மானிட இச்சைகளுக்குள் நடக்கும் போராட்டங்களுக்கு மத்தியிலும் நமது இதயத்தினின்று கேட்கப்படும் மெல்லிய குரலே மனச்சாட்சியாகுமென்று திருமதி எலன் ஒயிட் என்ற எழுத்தாளர் குறிப்பிடுகின்றார்.

மனச்சாட்சி மென்மையான ஆனால் உறுதியான குரலில் தொனிக்கின்றது. இந்த உலகத்தின் ஓலங்கள், ஆலோலங்கள், இரைச்சல்கள் ஆகியவைகளுக்கு மத்தியிலும் தெளிவாகக் கேட்கும் குரலே மனச்சாட்சியாகும். மனச்சாட்சி உண்மையின், நீதியின், சத்தியத்தின் குரலாகத் தொனிக்கின்றது. நமக்கு அறிவு தெளிந்த நாளிலிருந்து, மூச்சடங்கும் நாள்வரை கேட்கப்படும் ஒரே குரல் இந்த மனச்சாட்சியின் குரலே. வழி இதுவே இதிலே நடவுங்கள் என்று வழிகாட்டுகின்றது மனச்சாட்சியின் இந்தக் குரல். இதயத்தில் பதிவாகியிருக்கும் இறைவனின் திருக்குரலே அந்த மெல்லிய குரலாகும்.

மற்றவர்க்குக் கேட்காமல்,மனதில் எழும் குரலே இச் சிறுகுரல். செப்பனிடுங்குரல், சீரமைக்குங்குரல், சம்மட்டி போன்று இதயத்தளத்திலே ஓங்கி அடிக்கும் குரல்; சிந்தையைச் சீர்படுத்தி செயல்களைச் செம்மைப்படுத்தும் குரல், இனிய உறவோடு நயமோடு இயம்பிடும் குரல், அந்தஸ்து பார்க்காமல் அணுகிடும் அன்பின் குரல்,ஆத்ம சுத்திக்காய் இறைவன் அமைத்திட்ட அருங்குரல், இதயக் காவலனாய் இயங்கிடும் இன்குரல்; நமது நடையைக் பாப்பதற்காய நாட்டப்பட்ட நற்குரல், விண்ணையும் மண்ணையும் இணைக்கின்ற வினோதக்குரல்; தூய மனச்சாட்சியே.

ஒருமுறை ஆபிரகாம்லிங்கன் தாம் நடந்து செல்லும் வழியிலே ஆழ்ந்த உளையில் அகப்பட்டுக் கொண்ட பன்றி ஒன்று,வெளியே வரமுடியாமல் தத்தளித்துக் கொண்டிருப்பதைக் கண்டார். பன்றியின் நிலை அவரது மனதை வருத்திற்று. உதவி செய்ய எண்ணி உளையின் அருகே சென்றார். கை அசுத்தமாகி விட்டால, கழுவத் தண்ணீர் இல்லையே என்பதைக் கண்ட அவர் பன்றியைத் தூக்கி வெளியே எடுத்துவிடாமலேயே தொடர்ந்து நடையைக் கட்டினார். தொடர்ந்து நடந்து கொண்டிருந்த அவரது மனம் வாதிக்க ஆரம்பித்தது. எத்தனையோ சமாதானங்களை எடுத்துக் கூறியும்,மனச்சாட்சி ஏற்றுக்கொள்ளவில்லை. தொடர்ந்து இவருக்கும் மனச்சாட்சிக்கும் நடந்த போராட்டத்தில் மனச்சாட்சியே இறுதியில் வெற்றிபெற்றது. திரும்பி உளையை நோக்கி நடக்க ஆரம்பித்தார். மனச்சாட்சியின் உறுத்தல் நின்றது. பன்றியை உளையினின்று வெளியே எடுத்துவிட்டபின் "நான் அந்தப் பன்றியின் வேதனையைத் தீர்ப்பதற்காகத் திரும்பி வரவில்லை. எனது மனச்சாட்சி கொடுத்த தொல்லையை, வேதனையைச் சகிக்க முடியாமல் தான் திரும்பினேன். அமைதியைப் பெற்றுக்கொள்ளுவதற்காக சுயநலத்துடனே இக் காரியத்தில் ஈடுபட்டேன்" என்று பின்னர் தமது நண்பர்களிடம் கூறினார்.

நமது மனச்சாட்சி அடகு வைக்கப்பட்டிருக்கிறதா அல்லது நம்மிடத்தில் இருக்கிறதா? அடகு வைக்கப்பட்டிருக்குமாயின் எத்தகைய தியாகங்களையானாலும் தயங்காமல் செய்து அதைத் திரும்பப் பெறுவோம்.நாம் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் நமது தூய மனச்சாட்சி வெற்றி பெறுமானால்(நாம் மனச்சாட்சியிடம் தோற்றுப்போவோமானால்) அதுவே நமது வெற்றியாகும். அதுவே நம்மை இறை வழியில் நடத்தும் உறுதியான சாட்சியாகும்.

*கமலா ஜெகதீசன்*

# ஐ.ம.சு.முன்னணிக்குள் ஏற்பட்டுள்ள பிணக்கை பேச்சு மூலம் தீர்க்க வேண்டும்

## அமைச்சர் டி.எம்.ஜெயரட்ண கருத்து

(நுவரெலியா)

பலகட்சிகள் ஒன்றிணைந்து உருவான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினுள் ஏற்பட்டுள்ள பிணக்குகள் பேச்சுக்கள் மூலம் தீர்க்கப்பட வேண்டியவை என தபால் தொலைத் தொடர்புகள் அமைச்சர் டி.எம். ஜெயரட்ண தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உருவாக்கப்பட்ட போது செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கைகளுக்குப் புறம்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி செயற்பட்டு வருவதாக ஜே.வி.பி. தெரிவித்து வரும் குற்றச்சாட்டுகள் தொடர்பாக கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

நாட்டில் சிறந்த ஒரு இலட்சியத்தை எட்டுவதற்காகவே இப்புதிய முன்னணி உருவாக்கப்பட்டது. இவ்வாறு உருவாக்கப்படும் கூட்டமைப்புகளிடையே பிணக்குகள் உருவாகின்றமை வழமை. எனவே அவற்றைப் பேச்சுக்கள் மூலமும், வாதப் பிரதிவாதங்கள் மூலமும் தீர்த்துக் கொள்வதே சிறந்தது. இத்தகைய சர்ச்சைகள் உருவாவதே கட்சியின் ஸ்திரத்தன்மையை உறுதி செய்யும்.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினுள் உருவாகியுள்ள பிரச்சினைகளையும் சம்பந்தப்பட்டவர்கள் பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டும். மாறாக கட்சிப் பிளவுகளை மக்கள் மத்தியில் பிரசாரப்படுத்த முனைவது நாட்டின் நலனுக்கு பாதகமாக அமையும்.

அத்துடன்,இதனைச் சாதகமாகப் பயன்படுத்தும் எதிர்க்கட்சிகள் தற்பொழுது ஆட்சியமைத்துள்ள புதிய முன்னணி அரசினை பல வீனமடையச் செய்யலாம்.

இது நாட்டின் நலனுக்கும் அரசின் ஸ்திரத்தன்மைக்கும் பாதகமான சூழலை உருவாக்கும் எனவும அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(உ-4,61)

# சவுதி அரேபிய பணய நாடகத்தில் பலியானோரில் இருவர் இலங்கையர்

(கொழும்பு)

சவுதி அரேபியாவில் பிரதான எண்ணெய் உற்பத்தி நகரான அல்கொபாரில், அல்கெய்டா தீவிரவாதிகளின் கைகளில் சிக்கி உயிரிழந்த 22பேரில் இருவர் இலங்கையைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த சனிக்கிழமை அல்கெய்டா தீவிரவாதிகள் இலங்கையர் உள்ளிட்ட சுமார் 50பேரை பணயக் கைதிகளாக பிடித்து வைத்திருந்தனர்.

இதனையடுத்து சவுதி அரேபியாவின் பாதுகாப்புப் படையினர் தீவிரவாதிகளிடம் இருந்த பணயக் கைதிகளை மீட்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இதனால் தீவிரவாதிகளுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையில் கடுஞ்சமர் வெடித்தது.

இச்சமரில் சுமார் 22பேர் உயிரிழந்தனர். அவர்களில் 10பேர் இந்தியாவைச் சேர்ந்தவர்கள் எனவும் கூறப்படுகின்றது. இலங்கையைச் சேர்ந்த இவ்விருவரில் ஒருவர் நுவரெலியா மாவட்டத்தைச் சேர்ந்தவர் எனவும் மற்றவர் கொழும்பு முகத்துவாரத் தைச் சேர்ந்தவர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.(உ-60,10)

## இராசி பலன்

**01.06.2004**

**(வைகாசி 19,செவ்வாய்க்கிழமை)**

**திரயோதசி பி.ப 2.49 வரை**

**சுவாதி-சித்தம் மு.ப. 9.20 வரை**

**இராகுகாலம் 2.52-4.22 மணிவரை**

**சுபநேரம் 10.22-11.52 மணிவரை**

*வைகாசி விசாகம்*

**மேடம்**

தெயவசிந்தை, முயற்சி கைகூடும், போசன சுகம், உறவினர் சந்திப்பு.

**இடபம்**

கூட்டு முயற்சி, தனவிரயம், தாய்வழி உறவு, அபகீர்த்தி.

**மிதுனம்**

சென்ற இடத்தில் செல்வாக்கு, தொழில் சிந்தை, சயனசுகக் குறைவு.

**கடகம்**

உடல் நலக் குறைவு, கீர்த்தி, தெய்வ சிந்தை, தனலாபம்.

**சிங்கம்**

வீண்வார்த்தை, மேன்மை, காரிய அலைச்சல், போசன சுகம்.

**கன்னி**

எடுத்த காரியம் கைகூடும், கடின வார்த்தை, மாதர் நட்பு, நல்ல செய்தி.

**துலாம்**

அமைதிக் குறைவு, தொழில் மந்த நிலை, குடும்பநலம், போசன சுகம்.

**விருச்சிகம்**

புதிய முயற்சி, உறவினர் வருகை, கட்டுப்பாடு, எதிர்பாராத செலவு.

**தனுசு**

காரிய தடங்கல்,கலந்துரையாடல், திடீர் நன்மை, உடல் நலம்.

**மகரம்**

சொத்துப் பிணக்கு, அமைதிக் குறைவு, நல்ல வருமானம், சந்தோசமான சம்பவம்.

**கும்பம்**

சயன சுகக் குறைவு, முயற்சி தாமதம், சுபசெலவு, பிரயாணம்.

**மீனம்**

காரிய சித்தி, நண்பர்கள் சந்திப்பு, தனவரவு, பெருமையடைதல்

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

*வளவன்*

*மாணவர்களின் மொழியறிவை மேம்படுத்த*

# அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட முன்வரவேண்டும்

(கோப்பாய்)

ஆரம்பக் கல்வித் துறையின் மொழியறிவை மேம்படுத்துவதன் மூலமே உயர்தர வகுப்பு மாணவர்களின் கற்றல் கற்பித்தலை உயர்வடையச் செய்யமுடியும்.

இதனை மனதில் கொண்டு அர்ப்பணிப்புடன் செயற்பட அதிபர்கள், ஆசிரியர்கள் முன்வர வேண்டும்என யாழ. வலய கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ.வலய ஆரம்பக் கல்வித துறையின் வெளியடான தரம் 4 தமிழ்மொழி செயல் நூல் வெளியீட்டு நிகழ்வில் கலந்து கொண்டு உரையற்றிய போதே அவர் இதனைத தெரிவித்தார்.

கோப்பாய் கோட்டக்கல்வி அதிகாரி இ.சிவஞானசுந்தரம் தலைமையில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

கடந்த வருடத்தில் தரம் 3 மாணவர்கட்கு மாகாண மட்டத்தில் நடைபெற்ற செயல்முறைப் பரீட்சையின் அடைவு மட்டதை ஆய்வுக்குட்படுத்தி மாணவர்களின் கல்வித் தரத்தை சீர்செய்யும் வகையில் ஆரம்பக் கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் முதன்மையாசிரியர்கள் ஆகியோரின் அயராத உழைப்பினால் இச் செயல் நூல் உருவாக்கப்பட்டுள்ளது. இது அனைத்து செயல் நூல் மாணவர் மட்ட மாணவர்களின் அறிவாற்றலிலும் மாற்றத்தை உருவாக்கும் எனத் தாம் நம்புவதாகவும் தெரிவித்தார்.

(4,79)

# கையெழுத்துக் கோரிய சுங்க அதிகாரிகள் கைது

(கொழும்பு)

இலங்கையில் இருந்து சென்னை சென்ற விமானப் பயணிகளிடம் இருந்து கையெழுத்துக் கோரிய 6சுங்க அதிகாரிகளை இந்திய மத்திய உளவுத் துறை அதிகாரிகள் கைதுசெய்துள்ளனர்.

கொழும்பு கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து நேற்றுமுன்தினம் சென்னைக்குச் சென்ற இலங்கையர்கள் பொதிகளை எடுத்துச்செல்வதற்கு கையெழுத்து இடவேண்டும் என இந்திய சுங்க அதிகாரிகள் மிரட்டினர்.

இதனையடுத்து, இலங்கையர்கள் இந்திய மத்திய உளவுத்துறை அலுவலகத்திற்கு இதுபற்றி முறைப்பாடு செய்துள்ளனர்.

இவ்வாறு முறைப்பாடு செய்ததையடுத்து சம்பந்தப்பட்ட இடத்திற்கு விரைந்த உளவுத்துறை அதிகாரிகள் கையெழுத்துக் கோரிய 6பேரையும் உடனடியாக கைது செய்ததுடன், அவர்களிடம் இருந்த பெருமளவு பணத்தையும் பறிமுதல் செய்தனர்.

(உ-10)

இந்தியா புலிகள் மீதான தடையை … எனவும் தெரிவித்துள்ளார்.உ-4,16) … கையாள நோட்டும். இதனால் நாட்டில் … பாடு செய்துள்ளார்கள்.(உ-60,10)

## சிறுவிளம்பரங்கள்

### வரலாற்று ஆவணங்கள

கலாநிதி க.குணராசா-ஈழத்தவர் வரலாறு, The Jaffna Dynasty? மகாவம்சம் தரும் இலங்கைச் சரித்திரம், முத்துத் தம்பி பிள்ளையின் யாழ்ப்பாணச் சரித்திரம், ஜோனின் யாழ்ப் பாணச் சரித்திரம், மயில்வாக னப்புலவரின் யாழ்ப்பாண வைப வமாலை, 24 மணி நேரம், மீண் டும் யாழ்ப்பாணம் எரிகிறது. யாழ்ப் பாணக்கோட்டை வரலாறு- பிரபல புத் தகசாலைகளில் விற்பனையாகின் றன. கமலம் பதிப்பகம், 75/10A, பிற வுண் வீதி,நீராவியடி, யாழ்ப்பாணம்.

### கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக இரா மநாதன் நுண்கலை வளாக அனைத்து வருட மாணவர்களுக்கு மான முக்கிய கலந்துரையாடல் ஒன்று இன்று செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு நடேசர் அரங்கில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் முக் கியமான சில முடிவுகள் எடுக்கவுள் ளதால, அனைத்து மாணவர்களை யும தவறாது கலந்து கொள்ளுமாறு கவின் கலை மன்றத்தலைவர் எஸ். அருட்குமரன் கேட்டுள்ளார். (ச)

# அரசு-புலிகள் சமரசப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிப்பதற்கான சாத்தியக் கூறுகள் குறைவு

## இந்திய இணையத்தளம் கருத்து

(புதுடில்லி)

தமிமீழ விடுதலைப்புலிகளுக் கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையிலான சமரசப் பேச்சுவார்த் தைகள் மீண்டும் தொடங்குவதற் கான சாத்தியக் கூறுகள் குறைவு என இந்திய இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு மிடையில் மீண்டும் சமரசத்தை ஏற்படுத்தி பேச்சுக்களை ஆரம்பிக்கும முகமாக இலங்கைக்கு விஜயம் செய்த நோர்வேயின் விசேட சமாதா னத் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் இதுவிடயத்தில் இணக்கம எதுவும் எட்டப்படாத நிலையில் நாடு திரும்பியுள்ளமையை சுட்டிக் காட்டியே இணையத்தளம் பேச்சுவார்த்தைக் கான சாத்தியங்கள் உடனடியாக இல்லை எனத் தெரிவித்துள்ளது.

இதேவேளை,கடந்த இரண்டு ஆண்டுகளாக அமுலில் இருக்கும் போர் நிறுத்த ஒப்பந்தத்தைக் காப் பாற்றுவோம், நோர்வேயின் மத் தியஸ்தத்துடன் பேச்சு மூலம் தீர்வு காணுவோம் என்று இரு தரப் பினரும் எரிக்சொல் ஹெய்மிடம் மீண் டும் உறுதியளித்திருந்தமையும் அந்த இணையத்தளம் நினைவு படுத்தியுள்ளது.

நாங்கள் விடுத்த சுயாட்சி கோரிக் கைகளை அடிப்படையாக வைத்து பேச்சு நடத்த முனவந்தால் தான் மேற்கொண்டு பேச்சுவார்த்தை நடத்துவோம் என்று விடுதலைப் புலிகள் வலியுறுத்துகின்றார்கள். பிரதானமான அரசியல் விடயங்கள குறித்தும் இணையான பேச்சு வார்த்தை நடாத்த விடுதலைப் புலிகள் ஒப்புக்கொள்ள வேண்டும் என ஜனாதிபதி சத்திரிகா குமார துங்க வலியுறுத்துகின்றார்.

சமரசப் பேச்சுக்கள் தமிழ் மக்க ளுக்காகத் தான் நடாத்தப்படுகின் றன. தமக்கு இதில் நம்பிக்கை ஏற்பட வேண்டும் என்றால் தங்க ளின் சுயாட்சிக் கோரிக்கைகள் தொடர்பில் பேச்சுவார்த்தைகள் நடத்த அரசு முன் வரவேண்டும் என்று விடுதலைதலைப்புலிகள் அதற் குப் பதில் அளித்துள்ளார்கள்.

இந்த நிலையில் இரு தரப்பின ரும் பிடிவாதமாக இருப்பதால் இம் முறை சமரசப் பேச்சுக்களை தொட ரும் முயற்சியில் சற்றுத் தொய்வு ஏற்பட்டிருக்கிறது. அதுமட்டுமன்றி ஜனாதிபதி தலைமையிலான கூட் டணி அரசாங்கத்தின் ஜே.வி.பி என்ற இடதுசாரி இயக்கமும் இடம் பெற்றுள்ளது.

தமழீழ விடுதலைப்புலிகள் விதிகரும் நிபந்தனைகளை ஏற்று சமரசப் பேச்சுவார்த்தைகளில் ஈடு படக்கூடாது என்று ஜனாதிபதி க்கு அது நிபந்தனையை விதித்து வரு கின்றது. அத்துடன் விடுதலைப் புலிகளுடன் இலங்கை அர சாங் கம் நேரடியாகப் பேச வேண்டாம் நோர்வேயின் சமரசம் வேண்டாம் என்றும் அக்கட்சி வலியுறுத்துகின் றது.

இலங்கை மாகாண சபைகளுக் கான பொதுத் தேர்தல் நடைபெற விருக்கும் நிலையில் வேட்பு மனுத் தாககல் செய்வது கடந்த வெள்ளிக் கிழமையுடன் முடிவடைந்து விட்டது.


இதனால் ஜே.வி.பி யின் துணை யுடன் பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியை தோற்க டிக்க ஜனாதிபதியின் கட்சி முயல் கிறது. அதனால் அந்தக் கட்சியின் ஒப்பந்தத்தைத் தட்டிக்களிக்க முடி யாத நிலையில் ஜனாதிபதி இருக் கிறார் எனவும் அவ் இணையத் தளம் மேலும் சுட்டிக் காட்டியுள் ளது. (உ-121)

# ஜனாதிபதியின் குறுகிய சிந்தனைகளுக்கு ஜே.வி.பி. ஒருபோதும் துணைபுரியாது

## ரில்வின் சில்வா திட்டவட்டமாகத் தெரிவிப்பு

(கொழும்பு)

குறுகிய அரசியல் இலாபங் க



ளுக்கோ அல்லது குறுகிய சிந்தனை வயப்பட்ட செயற்பாடுகளுக்கோ ஜே.வி.பி. துணைபுரியமாட்டாது எனக் கட்சியின் செயலாளர் ரில்வின் சில்வா கூறியுள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா குமார துங்கவுக்கு அனுப்பிய கடிதத்தி லேயே அவர் இவ்வாறு குறிப்பிட் டுள்ளார்.

சமாதான முயற்சிகளைக் கை யாளும விதம் மற்றும் கோட்பாட்டு ரீதியான பிரச்சினைகளைக் கையாள் வதில், ஆட்சியில் பங்கெடுத்துள ள தமது கருத்துக்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டியது அவசியம்.

ஐக்கிய தேசிய முன்னணியின் ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்து, நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பி அனைத்து இன மக் களின் உரிமைகளைப் பாதுகாப்ப தற்கான பொதுவான தீர்வொன்றி னைக் காண்பதற்காகவே, பொது ஜன ஐக்கிய முன்னணியுடன், ஜே. வி. பி. கூட்டமைத்துக் கொண்டது என்றாா.

மேலும் 35 அமைச்சர்களைக் கொணட அமைச்சரவையை அமைப் பது என்று ஏற்கனவே தாம் செய்து கொண்ட உடன்படிக்கைக்கு மாறாக, ஜனாதிபதி தற்போது புதிதாக இரண்டு அமைச்சர்களை அமைச் சரவையில் சேர்த்துக் கொண்டுள்ள மையையும் சுட்டிக்காட்டியுளள ஜே. வி.பி.யின் பொதுச் செயலாளர், இதன் மூலம் அமைச்சர்களின் எண்ணிக கை தற்போது 37 ஆகியிருப்பதாக வும் இது அமைச்சரவை விரிவாக் கத்துக்கே இட்டுச் செல்லும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வகையான விடயங் களில், ஜே.வி.பி. கடந்த தேர்தலில் மக்களுக்கு வாக்குறுதி வழங்கியி ருந்தமையையும் நினைவுபடுத் தியுள்ள ரில்வின் சில்வா, ஜனாதிபதி சில தனிப்பட்டவர்களைத் திருப்திப் படுத்தும் நடவடிக்கைகளில் ஈடு பட்டுள்ளதாகவும் அதிருப்தி வெளி யிட்டுள்ளார். (உ)

# புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் மனித உரிமை நிறுவனம்

(கொழும்பு)

தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங் களில இடம்பெற்று வரும் மனித உரிமை மீறல்ச் சம்பவங்களை கண் காணிகரும் வகையில், மனித உரிமை நிறுவனம் ஒன்றினை, தமிழீழ விடு தலைப் புலிகள் நிறுவவுள்ளதாக, தமிழீழவிடுதலைப் புலிகளின் பேச் சாளர் தயா மாஸ்டர் தெரிவித்துள்ளார்.

அணமையில் சமாதானச் செயற் பாடுகளின் சர்வதேச மன்னிப்புச் சபை யின முன்னாள் தலைவரும், மனித உரிமைகள் தொடர்பான விவகாரங் களில நிபுணத்துவம் பெற்றவரு மான இயன் மார்ட்டினுடன் இடம் பெற்ற சந்திப்பின் போது,

விடுதலைப் புலிகளின் கட்டுப் பாட்டுப் பிரதேசங்களில் மனித உரிமை நிறுவனம் ஒன்று ஆரம்பிக் கப்படுமென, அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் உறுதியளிததிருந்தமை இங்கு குறிப் பிடத்தக்கதாகும்.

இதேவேளை, தமிழீழ வடுதலைப் புலிகளின் இந்த முயறசியினை மனித உரிமை மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் செயலாளர என்.கந் தையா பெரிதும் வரவேற்றுள்ளதோடு, தமிழீழ விடுதலைப் புலிகளின் இந்த மனித உரிமை நிறுவனத்துக்கு சுயாதீனமான உத்தியோகத்தர் களே பணியில் ஈடுபடுத்தப்பட வேண்டு மெனவும், இதன்மூலமே, புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு வெளியேயும் இந்நிறுவனத்தின் பணிகளை விரிவுபடுத்த முடியுமென வும் வேண்டுகோள் விடுத்துள்ளார். (உ)

# ஐ.ம. சு.மு.-ஜே.வி.பி. முரண்பாடு வலுக்கிறது

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்ட மைப்பு அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பி மற்றும் சிறி லங்கா சுதந்திரக் கூட்டமைப்பினர் இடையேயான முறுகல் நிலை மேலும் வலுப்பெற்றுள்ளது.

பாதுகாப்புப் பிரதியமைச்சர் மற்றும் புத்த சாசன அமைச்சராக முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக் கிரம நாயக்கவும், அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சராக டி.ஈ. டபிள்யூ குணசேகரவும், ஜனாதி பதியால் புதிதாக நியமிக்கப்பட்டமை தொடரபாகவே இந்த முறுகல் நிலை வலுபபெற்றுள்ளதாக தெரிய வரு கிறது.

மேற்படி ஜனாதிபதியால் வழங் கப்பட்டுள்ள இரண்டு நியமனங் கள மூலம் 35 அமைச்சர்கள் மட்டுமே அமைச்சரவையில் அங்கம் வகிகக லாம் என்ற கூட்டமைப்பின் விதி யினை ஜனாதிபதி மீறி அமைச் சர்களின் எண்ணிக்கையை 37 ஆக அதிகரித்துள்ளதாகவும் ஜே.வி.பி யால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இதேவேளை சிறிலங்காவின் நாடா ளுமன்றத்துக்கு 20 அமைச்சர்களே போதுமானதென ஜே.வி.பி முன்னர் கூறி வந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (உ)

# பேச்சுக்கான நிகழ்ச்சி நிரலை எதிர்பார்த்திருக்கும் புலிகள்

(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தை களை மீள ஆரம்பிப்பதற்கான நேரத்தையும், அது தொடர்பான நிகழ்ச்சி நிரலினையும் அறிவிக்க வேண்டிய பொறுப்பு ஜனாதிபதியி டமே இருப்பதாக தமிழீழ விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக, கொழும்பிலிருந்து வெளி யாகும் ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு, தமிழீழ விடுதலைப் புலிகளின் ஊடகப் பேச்சாளர் தயா மாஸ்டர் கருத்து வெளியிடுகையிலேயே இவ் வாறு தெரிவித்துள்ளார்.

வடக்கு- கிழக்குக்கான இடைக் கால நிர்வாக சபை தொடர்பாகவே முதலில் பேசப்பட வேண்டுமென்ற, தமது உறுதியான நிலைப்பாட் டினை தமிழீழ விடுதலைப் புலிகள் ஏற்கனவே அரசாங்கத்திடம் தெளி வாக வெளிப்படுத்தியுள்ளதாகவும், ஆனால் தமிழீழ விடுதலைப் புலி களின் இந்த உறுதியான நிலைப் பாட்டினை, ஏற்றுக்கொள்வதற்கு சிறிலங்கா அரசாங்கம் தயங்கிவருகின் றமையே பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிப்பதற்கான முக்கிய தடை

மாஸ்டர் மேலும் தெரிவித்துள்ளார்.

சமாதானப் பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிப்பது தொடர்பான ஜனாதி பதியின் பதிலுக்காக தாம் இன்ன மும காத்துக்கொணடிருப்பதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (உ)



கியூடெக் மகளிர் உயிர்ப்பூட்டல் குழு அரியாலை யூதாததேயு ஆலய முன்றலில் நடத்திய மகளிர்க்கான தலைமைத்துவ கருத்தரங்கில் கியூடெக் இணைப்பாளர் ஜோசப்பாலா

கோண்டாவில் தில்லையம்பதி சிவகாமி அம்பாள் ஆலய தேர்த்திருவிழாவை ஒட்டி இக்கவிதை பிரசுர மாகிறது

### வானவன் மாதேவி வருகிறாள் தேரேறி

சித்திரத் தேரேறி வருகிறாள் சிவகாமி
நித்தம் துதிக்கின்ற அடியவரைக் காத்திடவே

நாதஸ்வரங்களோ கானமழை பொழிய
மேகமோ அதிர மேளங்கள் முழங்க
அரோகரா ஓசையோ அண்டமெலாம் அதிர
சங்கோடு மணியோ இடியாய் ஒலிக்க

கோலமயில் அழகியை தேரேற்றி இழுக்க
கோண்டாவிலே கூடி கொண்டாட்டம் நடாத்த
வானவன் மாதேவி வருகிறாள் தேரேறி
துன்பத்தால் துவண்டு தொழுதோரைக காத்திட

ஏழ்மையால் வறண்டு வாடிய கையரையும
நேர்மையாய் பணிசெய்தே பழுத்திட்ட கையரையும்
பாவங்கள் போக்க வந்த கையரையும் காக்க
பச்சை உடுத்தமுன் செம் பட்டாடை உடுத்தியே

ஆஞ்சனேயன்,
கோண்டாவில்.

அஞ்சுவ தஞ்சாமை பேதமை அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில் - குறள்

# வலம்புரி

## தமிழ்ப் பத்திரிகையாளர்களின் பரிதாப நிலை இதுதானா?

மூத்த பத்திரிகையாளர் ஜி.நடேசன் அவர்கள் மட்டக்களப்பில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்ட செய்தி பத்திரிகையாளர்களை மட்டுமன்றி சமாதானத்தை விரும்பும் அனைவரையுமே அதிர்ச்சிக்கு ஆ[illegible]க்கியுள்ளது.

[illegible]லங்கையில் இனயுத்தம் என்று ஆரம்பமாகியதோ அன்று முதல் சமாதானச் சூழ்நிலை என்று கூறப்படும் இன்றைய காலம்வரை தமிழ்ப்பத்திரிகையாளர்கள் மரணபயத்துடனேயே தங்களின் பணியைச் செய்துவருகின்றனர்.

பத்திரிகையாளர்கள் என்றால் அவர்கள் எங்கும் எப்போதும் எப்படியும் சுட்டுக் கொல்லப்படக் கூடியவர்கள் என்பது ஆயுத கலாசாரத்தின் மகுடவாசகமாக அமைந்துவிட்டது போலும். கடந்தகாலங்களில் ஆயுதங்களின் அரக்கத் தனத்திற்குப் பலியாகிப்போன பத்திரிகையாளர்களின் நீண்ட வரிகையில் ஜி.நடேசனும் சேர்க்கப்பட்டுவிட்டார்.

இவ்வாறு பத்திரிகையாளர்களைக் கொலை செய்வதன் மூலம் கொலையாளிகள் எதனைச் சாதிக்கப் போகின்றார்கள். மனித நேயத்தோடு பத்திரிகையாளர்களைப் பார்ப்பதற்கு அவர்கள் ஏ[illegible] தயங்குகிறார்கள் என்ற வினாக்கள் ஒவ்வொரு பத்திரிகையாளர்களிடமும் எழுகின்றன.

சமாதானச் சூழ்நிலை என்று கூறப்படுகின்ற போதிலும் பத்திரிகையாளர்களுக்கு இருக்கக் கூடிய பாதுகாப்பு என்ன? அப் பாதுகாப்பை உறுதி செய்யக் கூடியவர்கள் யார்?

இவற்றுக் கொல்லாம் விடைகாண முடியாத தமிழ்ப் பத்திரிகையாளர்கள் பத்திரிகைத் துறையில் இருந்து ஒதுங்கிவிடுவதே ஒரே வழி என்ற முடிபை எடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

குறிப்பாகத் தமிழ் மக்கள் மீது சிங்களப் பேரினவாதம் நடத்திய அழிப்பு-அடக்குமுறை போன்றவற்றையெல்லாம் வெளிக்கொணர்ந்து, சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்க வைத்த தமிழ்ப் பத்திரிகையாளர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற பரிசு மரணமாக இருக்குமாயின் அதைவிட மிகப் பெரும் கொடுமை வேறெதுவுமாக இருக்க முடியாது.

தமிழ்ப்பத்திரிகையாளர்களைப் பொறுத்தவரை அவர்கள் உலக நாட்டுப் பத்திரிகையாளர்கள் போன்று வசதிவாய்ப்புக்களோடு வாழ்பவர்கள் அல்ல. சாதாரண மக்களோடு மக்களாக அனுபவிக்கின்ற துன்பங்களைத் தாங்களும் அனுபவித்துக் கொண்டு தங்கள் பணியைச் செய்பவர்கள். அவர்கள் தங்கள் பணிக்காக சிங்களப் படைகளால் அனுபவித்த துன்பதுயரங்கள் ஏராளம். சிறைகளில் அடைக்கப்பட்ட சம்பவங்கள் பல.

இவ்வாறாக சிங்களப் பேரினவாத அரசுகளால் பயமுறுத்தப்பட்ட தமிழ்ப் பத்திரிகையாளர்களுக்குக் கிடைக்கும் பரிசு கொலையாக இருக்குமாயின், இப்பத்திரிகையாளர்கள் யாருக்காகப்பாடுபட்டார்கள். அவர்கள் தங்கள் பணியை இனத்தின் விடிவுக்காக மேற்கொண்டமை தவறானதா போன்ற கேள்விகள் மௌனமாக ஒலிக்கின்றன.

சிங்களவர்கள் கைகொட்டிச் சிரிக்கும் வகையில் தமிழ்ப் பத்திரிகையாளர்கள் வீதிகளிலும், வீடுகளிலும் வைத்துக் கொல்லப்படும் கோர நிகழ்வுகள் முற்றுப் பெறவேண்டும். இது மனித நேயத்தின் பேரால் முன்வைக்கப்படுகின்ற கோரிக்கை.

மரண அவலங்களுக்குள் வாழ்ந்த தமிழ் இனத்திற்கு மீண்டும் மீண்டும் அவல மரணங்களே செய்திகளாக அமையுமாயின் அது எதிர்காலச் சந்ததியை மிகப் பெரிதாகப் பாதிக்குமென்ற உண்மையை உணர்ந்து இத்தகைய படுகொலைகளை [illegible]த்த அனைவரும் முன்வர வேண்டும். இஃது பத்திரிகையாளர் நடேசனின் மரணத்தில் இருந்து விடுக்கப்படுகின்ற மனித நேய வேண்டுகோள்.

இத்தகைய கொலைகளைக் கண்டிக்க-கட்டுப்படுத்த தமிழினத்தின் புத்திஜீவிகள், மதத் தலைவர்கள் முன்வருவதுடன் இது தொடர்பிலான நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்வதும் அவசியமாகும்.

மரணங்களே தீர்ப்புகளாக அமையுமாயின் மனித வாழ்க்கை அர்த்தமற்றதாகிவிடும் என்ற தத்துவம் உணரப்படுவதாக.

---

பொருண்மியக் கொள்கையை வரையறுக்கத் தவறின்

# சர்வதேச நாணய நிதியத்தின் 80 மி. டொலர் கடன் கைநழுவிப் போகும் அபாயம்

(கொழும்பு)

அடுத்த மாதம் நடுப்பகுதிக்குள் இலங்கை அரசு தன் பொருண்மியக் கொள்கையை தெளிவாக அறிவித்தால் மட்டுமே சர்வதேச நாணய நிதியம் 80 மில்லியன் டொலர் கடனை வழங்கும் என நாணய நிதிய அதிகாரி ஜெகானீர் அஸீஸ் [illegible]

[illegible] நிதிய ஆசிய பசுபிக் பிரிவின் பிரதித் [illegible]ீர் அஸீஸ் தலைமையிலான குழுவினர் [illegible] சந்திரிகா குமாரதுங்கவுடன் கலந்துரையாடல் [illegible]டனர்.

இச்சந்திப்பின் பின் கருத்துத் தெரிவித்த அஸீஸ், அடுத்த மாத நடுப்பகுதிக்குள இலங்கை அரசு தெளிவாக தன பொருளாதாரக் கொள்கையைத் தெரிவித்தால்,கடந்த நவம்பா மாதத்தில் வாக்களிக்கப்பட்ட 80 மில்லியன டொலர் கடனை வழங்க முடியும்.

சந்திரிகா தலைமையிலான கூட்டணி ஆட்சியில்,இடதுசாரிகளின் ஆதிக்கம் அதிகமாகவுள்ளது.அது தனியார் மயமாககல திட்டத்தையே சரி வர அறிவிக்க முடியாமல் உள்ளது.

இதனால் தெளிவற்ற பொருளாதாரக் கொள்கையில் உள்ள அரசிற்கு உதவ சர்வதேச நாணய நிதியம் தயாராகவில்லை.

ஜனதபதி சந்திரிகா அடுத்த மாதம் மின்சாரம் ,பொருளாதாரம தொடர்பாகவும் கொள்கை நிலைப்பாடு தொடர்பாகவும் தெளிவான கருத்தை வெளியிடுவார் எனக் கருதப்படுகிறது.

அரசின் பொருளாதாரக் கொள்கை, நிலைப்பாட்டை அறிய நாம் காத்திருக்கின்றோம். கடந்த நவம்பர் மாதத்தில் அதாவது ரணில் விக்கிரம சிங்க தலைமையிலான அரசு காலத்தில் மூன்று ஆண்டுக் கடனாக 80 மில்லியன் டொலர்களை வழங்க சர்வதேச நாணய நிதியம் இணைங்கி இருந்தது.

ஜனாதிபதி சந்திரிகாவின் அரசியல் இழுபறியால் அதனை நாணய நிதியம் நிறுத்திவைத்துள்ளது என்று கூறிப்பிட்டார்.

(உ -121)

# கிழக்கு மாகாணக் கொலைகள் உடன்படிக்கைக்கு அச்சுறுத்தல்

## கண்காணிப்புக் குழுவின் புதிய பேச்சாளர் கவலை

கிழக்கு மாகாணத்திலும் வவுனியாவிலும் அண்மைக் காலமாக இடம் பெற்றுவரும் கொலைகளினால் அரசும் விடுதலைப் புலிகளும் செய்து கொண்ட யுத்த நிறுத்த உடன்படிக்கைக்கும் சமாதான முயற்சிகளுக்கும் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் புதிய பேச்சாளர் மேஸா பின் போஹா அம்மையார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

கிழக்கு மாகாணத்திலும் வவுனியாவிலும் அண்மைக் கால மாக இடம் பெற்றுவரும் கொலைகளில், இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு அதிக கவனம் செலுத்தி வருகிறது.

இக்கொலைகளுடன் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரும் பொறுப்புணர்வுடனும் விவேகத்துடனும் நடத்து கொள்ளவேண்டும்.

பிராந்தியத்தின் தற்போதைய நடப்பு நிலைகுறித்து ஆராய்வதற்கு கிழக்குப் பிராந்திய பாதுகாப்புப் படை உயர் அதிகாரிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் அடுத்த மாதம் 2ஆம் திகதி சந்திப்பு ஒன்றுக்கு ஏற்பாடு செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.(ம)

# கடற்றொழில் அபி. மன்றங்களை நிறுவ அமைச்சர் சந்திரசேன நடவடிக்கை

(கொழும்பு)

மீனவர் சமூகத்தின் நன்மை கருதி கடற்றொழில் அபிவிருத்தி மன்றங்களை நிறுவப்போவதாக மீனவ கடற்றொழில் வளங்கள் அமைச்சர் சந்திரசேன விஜயசிங்க தெரிவித்துள்ளார்.

பேருவளை மீன்பிடித்துறை முகத்திற்கு விஜயம் செய்த அமைச்சர் அங்கு செய்தியாளர்கள் மத்தியில் பேசுகையிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில், மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இனங்கண்டு, அவற்றுக்கு துரித தீர்வு காண்பதற்காகவே இத்தகைய கடற்றொழில் அபிவிருத்தி மன்றத்தை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளேன்.

இதேவேளை, ஐக்கிய தேசிய முன்னணி அரசின் காலத்தில் மீன்பிடித்துறைக்கு வெளிநாடுகளால் வழங்கப்பட்ட நிதியுதவிகள் யாவும் வீண்விரயம் செய்யப்பட்டன.

எனவே, எதிர்காலத்தில் கிடைக்கும் நிதியுதவிகளையாவது ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தி நவீன தொழில்நுட்பத்துடன் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளேன் என்றார். (60,10)

# திருமலை- மூதூர் படகுச் சேவையில் போக்குவரத்து வசதிகளை அதிகரிக்குமாறு கோரிக்கை

(திருகோணமலை)

திருகோணமலைக்கும் -மூதூருக்குமிடையான கடல் வழிப் பயணச் சேவையில் மேலதிகமாக போக்குவரத்து வசதிகள் செய்து தரப்படல் வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி பகுதியில் தற்போழுது இரு படகுகள் சேவையில் ஈடுபட்டு வந்தாலும் காலநிலை மாற்றங்கள் மற்றும் பயணிகளுடைய தேவைகள் என்பவற்றிற்கு ஏற்ப பயன்படுத்துவதற்கு இவ் விரு படகுகளும் போதுமானதாகக் காணப்படவில்லை. இதனால் பணிகள் பல்வேறு அசௌகரியங்களையும் எதிர்கொண்டு வருகின்றனர்.

எனவே, இவற்றைக் கருத்தில் கொண்டே மேற்படி பகுதிகளுக்கான படகுச் சேவை வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4,61)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

ஒவ்வோர் இயல்பிற்கும் ஒரு தனிவழி இருக்கிறது.ஆனால் பொதுவான அம்சம் என்னவென்றால் மனதைப் பற்றிக் கொள்ளுங்கள். மனம் ஓர் ஏரியைப் போன்றது. அதில் போடப்படும் ஒவ்வொரு கல்லும் அலைகளை எழுப்புகின்றன. இந்த அலைகள் நாம் யார் என்பதை நாம் பார்க்கவிடுவதில்லை. இயற்கை அலை எழுப்பாமல் பார்த்துக் கொள்ளுங்கள் . அமைதியாக இருங்கள். சிறிது நேரம் சென்றால் இயற்கையே உங்களை வென்றுவிடும்.

சுவாமி விவேகானந்தர்

# நிதி, மின்வலு உற்பத்தித் துறைகளை மறுசீரமைக்க ஜனாதிபதி நடவடிக்கை

(கொழும்பு)

நிதி மற்றும் மின்வலு உற்பத்தித் துறைகளை மறுசீரமைக்கும் திட்டங்கள் குறித்த விபரம் விரைவில் வெளியிடப்படும் என ஜனாதிபதி உறுதியளித்திருப்பதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, நிதி மற்றும் மின்வலு உற்பத்தித்துறைகளை மறுசீரமைப்பது தொடர்பான விரிவான பொருளாதாரக் கொள்கைகளை ஜுன் மாத நடுப்பகுதியில் வெளியிடுவதன் மூலம் சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கடன் பெறமுடியும் என்பதனாலேயே,ஜனாதிபதி இவ்வாறு உறுதியளித்திருப்பதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, சர்வதேச நாணய நிதியம் 56 கோடி டொலர்களை இலங்கைக்கு அபிவிருத்தி உதவியாக வழங்குவதற்கு ஏற்கனவே உறுதியளித்துள்ளமை தெரிந்ததே. (60,10)

# சைக்கிள் பயணிகளைப் பாதுகாக்க வீதிகளில் விசேட ஒழுங்குகள்

## நெடுஞ்சாலை அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

நெடுஞ்சாலைகளில் சைக்கிள்களில் பயணிப் போருக்காகத் தனியான ஒழுங்குமுறைகளை அமைக்க நெடுஞ்சாலைகள் அமைச்சு விசேட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

நெடுஞ்சாலைகளினூடாக சைக்கிள்களில் பயணிப் போரே அண்மைக்காலமாக விபத்துகளில் சிக்கிப் பலியாகி வருகின்றனர். இதனைக் கருத்திற்கொண்டே மேற்படி நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

இதனடிப்படையில் வீதிகளின் இருமருங்கிலும் விசேடமான பாதை அமைப்பு முறைவசதிகள் ஏற்படுத்திக் கொடுக் கப்படவுள்ளன.

இதன் மூலம் வீதி விபத்துக்களில் சிக்கி பாதிப்படையும் சைக்கிள் பயணிகளின் வீதம் குறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. (4,61)

# இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மீளாய்வு மாநாடு இன்று பெல்ஜியத்தில்

(கொழும்பு)

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மீளாய்வு மாநாடு இன்று பெல்ஜியத்தின் தலைநகரான பிரசல்சில் நடைபெறவுள்ளது.

அமெரிக்க இராஜாங்க அமைச்சர் றிச்சர்ட் ஆர்மிடேஜ் தலைமை தாங்கும் இம் மாநாட்டில் தெற்காசிய விவகாரங்களுக்கான அமெரிக்க இராஜாங்கச் செயலார் கிறிஸ்டினா ரொக்கா, நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன், ஐரோப்பிய ஒன்றியத்தின் பணிப்பாளர் கிறிஸ்பட்டன், யப்பானின் விஷேட சமாதானத் தூதுவர் யசூசி அகாஷி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கடந்த ஆண்டு ஜூன் மாதம் டோக்கியோவில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டில் 4.5பில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்க உதவி வழங்கும் நாடுகள் தீர்மானித்திருந்தன.

இந்நிதியுதவியினை வழங்குவதற்கான சூழல் உள்ளதா என்பதை ஆராய்வதற்காகவே இந்த மீளாய்வு மாநாடு இன்று நடைபெறவுள்ளது.

இதேவேளை இந்த மாநாட்டில் இலங்கையின் சமாதான முயற்சியின் தற்போதைய நிலை என்ன என்பது குறித்தும் விரிவாக ஆராயப்படவுள்ளது.

மேலும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை தற்போது உள்ள அரசு உடனடியாக ஆரம்பிக்க வேண்டுமென இந்த மாநாட்டில் கலந்து கொள்ளும் ஜப்பான் மற்றும் நோர்வே நாட்டுப் பிரதிநிதிகள் வலியுறுத்துவார்கள எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுகுமிடையில் மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தையினை ஆரம்பிப்பதற்கான திகதி குறிக்கப்படாத நிலையில் இம் மீளாய்வு மாநாடு நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-10)

# ஆனந்த சங்கரி கண்டனம்

(கொழும்பு)

ஊடகவியலாளர் ஜி.நடேசன் படுகொலை செய்யப்பட்டதைத் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி கண்டித்துள்ளார்.

நடேசனின் கொலை தமிழ்ச் சமூகத்திற்கு நல்லதல்ல கருத்துச் சுதந்திரங்களுக்கு மதிப்பளித்து ஒரு நல்ல ஆரோக்கியமான அரசியல் சூழலை எமது மண்ணில் உருவாக்க வேண்டுமென்பதை இச் சம்பவம் வலியுறுத்துகின்றது.

கிழக்கிலங்கைப் பல்கலைக் கழகப் பொருளியல் துறைத் தலைவரின் படுகொலையின் சோகம் ஆறுவதற்கு முன் ஊடகவியலாளர் நடேசன் மீதான அடுத்த படுகொலையும் இடம் பெற்றிருப்பது. தமிழ்ச் சமூகத்தை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது என்று தெரிவித்துள்ளார்.(த)

# உலக வங்கிக் குழு இன்று கிளிநொச்சி விஜயம்

(யாழ்ப்பாணம்)

உலக வங்கியின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவொன்று இன்று கிளிநொச்சி விஜயம் செய்யவுள்ளது.

தமிழர் தாயகப்பகுதிகளில் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக ஆராய்வதற்காக கிளிநொச்சி செல்லும் இக் குழுவினர் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

அத்துடன் உலக வங்கியின் நிதியுதவியுடன் போரினால் பாதிக்கப்பட்ட பகுதி மக்களுக்காக மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்களையும் நேரில் பார்வையிடவுள்ளனர். (உ-464)

# நடேசன் மீதான...

எழுத்துத் துறையால் வலியுறுத்தியவர்.

இத்தகைய ஒரு தேசியப் பற்றாளரை தமிழினம் இழந்துள்ளது. இனத்தின் விடுதலைக்கான நியாயங்களை வலுப்படுத்தும் ஆணித்தரமான கருத்துக்களையும் தமிழனத்தின் போராட்டத திற்கு வலுவூட்டும் புள்ளி விபரங்களையும், தரவுகளையும் அவ்வக காலங்களில் தனது ஆக்கங்கள் மூலம் வெளிப்படுத்தியவர். நிகழ் காலத்தோடு எதிர்காலத்தை இணைத்து தமிழ் சமூகம் சுதாகரித்துக் கொள்வதற்கான அறிவுறுத்தல்களையும் சுட்டிக்காட்டுதல்களையும் மேற்கொண்டு ஊடகவியலாளனுக்குரிய சிறந்த பண்பினை கொண்டவர்.

யுத்த, சமாதான காலத்தில் இன்னல்களை அனுபவித்த தமிழ் மக்களின் வாழ்வியல் துன்பங்களை விடுதலையுடன் கூடிய இயல்பு வாழ்க்கைக்காக மக்கள் கொண்ட ஏக்கங்களை உள்நூரிலும் உலக நாடுகளிலும் வெளிக் கொண்டு வந்ததன் மூலம் சர்வதேசத்தின் நம்பிக்கை குரலாக விளங்கியவர். தமிழ்த் தேசிய தலைமையின் கீழ் மிகுந்த மதிப்பும் பற்றுறுதியும் நம்பிக்கையையும் பெற்றவர்

அந்த தலைமையின் நம்பிக்கைக்குரிய தகைமைகளை மக்கள் மத்தியில் வெளிப்படுத்தி தமிழ்த்தேசிய தலைமையின் கீழ் மக்கள் அணிதிரளவேண்டிய வரலாற்று அவசியத்தை மக்களுக்கு உணர்த்தியவர்.

உண்மை-நியாயம் என்பவற்றின் பக்கமாக அசையாது நிலையெடுதது நின்றவர். ஆபத்துக்களை எதிர் நோக்கிய போதும் தனது நிலையில் இருந்து சிறிதும் மாறுபடாது வரலாற்றில் தான் வரித்த பாத்திரத்தை முழுமைபடுத்தியவர்.

கல்விமான்கள், ஊடகவியலாளர்கள் தமிழ்மக்களின் நேச சக்திகள் கொல்லப்படுவது கொடுஞ் செயலாகும். சமாதானம் நிலவி வரும் இக்காலத்திலும் இத்தகைய கொலை நடவடிக்கைகள் மூலம் சமாதானத்திற்கெதிரான சக்திகள் தமது அடாவடித் தனங்களை மேற்கொண்டு வருகின்றன.

இந்நடவடிக்கையானது இத் தீவில் வாழும் மக்களை மீண்டும் இன்னலுக்குள் உள்ளாக்கும் வரலாற்றுக்காலத்திற்கே இட்டுச் செல்லும். எனவே இந்நிலையை கருத்தில் எடுத்து அரச படைகளும் அப்படைகளுடன் இணைந்து செயற்படுபவர்களும் இக்கொலைகளை நிறுத்திக் கொள்வதே இக்காலத்தின் கட்டாயமாகும்.

மூத்த ஊடகவியலாளர் ஜிநடேசன் அவர்களின் இழப்பினால் தாழாது துயருற்றிருக்கும் குடுப்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் பிரிவு அவர் குடும்பத்திற்கு எவ்வளவு தாக்கத்தையும், சோகத்தையும் ஏற்படுத்தியதோ அதேயளவுக்கு பத்திரிகை உலகிற்கும் எமக்கும் எமது தேசத்தின் வரலாற்றிற்கும் ஏற்படுத்தியிருக்கிறது.

என்றும் அக் கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ந)

# கட்சிகளின் கூட்டமைப்புக்குள் முரண்பாடு ஏற்படுவது சகஜம்

## நிலைமையைச் சுமுகமாக்க பிரதமர் முயற்சி

(கொழும்பு)

பல கட்சிகள் சேர்ந்து உருவாக்கும் கூட்டமைப்புகளுக்குள் பலவிதமான முரண்பாடுகளும் உருவாகுவது சகஜம் என பிரதமர் மகிந்த ராஸபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு உடன் படிக்கைக்குப் புறம்பாக ஸ்ரீலங்கா சுதநிதிரக் கட்சியின் செயற்பாடுகள் அமைந்து வருவதினால் புதிய சட்ட அமைப் பில் இருந்து தாம் விலகப் பேவதாக ஜேவிபி அறிவித்துள்ளது.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த போதே பிரதமர் ராஜபக்ஷ இதனைத் தெரிவித்துள்ளார். நாட்டின் இறைமையைப் பாதுகாக்க உருவாக்கப்பட்ட சுதந்திரக் கூட்டமைப்பின், கொள்கையை நிறைவேற்றி கடந்த பொதுத் தேர்தலூடாகக மக்கள் எமக்கு வழங்கிய ஆணையை நிறைவேற்ற வேண்டும்இதற்காக தொடர்ந்தும் புதிய கூட்டணிக் கட்சிகள் யாவும் தமது கொள்கைகளை மனதில் கொண்டு புரிந்துணர்வுடனும் விட்டுக் கொப்புக்ளுடனும் செயற்பட வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.(உ-4,62)

# மனித உரிமைகள் அமைப்பை விடுதலைப் புலிகள் நிறுவுவர்

(கிளிநொச்சி)

தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில இடம் பெற்றுவரும் மனித உரிமை மீறல் சம்பவங்களைக் கண்காணிக்கும் வகையில் மனித உரிமை நிறுவனம் ஒன்றினை நிறுவவுள்ளதாக தமிழீழ விடுதலை புலிகளின் ஊடகப் பேச்சாளர் தயாமாஸ்ரர் தெரிவித துள்ளார்.

அண்மையில் சர்வதேச மன்னிப்புச் சபையின் முன்னாள் தலைவரும் மனித உரிமைகள் தொடர்பான விவகாரங்களில் நிபுணத்துவம் பெற்றவருமான இஜன் மார்ட்டினுடன் இடம் பெற்ற சந்தப்பின் போது விடுதலை புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் மனித உரிமை நிறுவனம் ஒன்று ஆரம்பிக்கப்படுமென அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வன் உறுதியளித் திருந்தார்..

இதற்கமையவே மனித உரிமை நிறுவனம் ஒன்றை ஸ்தாபிக்கவுள்ளதா தயாமாஸ்டர் கூறினார். இதேவேளை தமிழீழ விடுதலை புலிகளின் இந்த முயற்சியை இலங்கை மனித உரிமை மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் செயலாளர் என் கந்தசாமி வரவேற்றுள்ளார்.

தமிழீழ விடுதலை புலிகளின் இந்த மனித உரிமை நிறுவனத்திற்கு? சுயாதீனமான உத்தியோகத்தர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட வேண்டும் எனவும் இதன் மூலமே புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்சகளுக்கு உள்ளேயும் வெளியேயும் இந்நிறுவனத்தின் பணிகளை விரிபுபடுத்த முடியும் எனவும் அவர் தெரிவித்துார். (த-121)

# பத்திரிகையாளர் ஜி.நடேசன்....

மேற்கொண்டுவருகின்றனர்.

கிழக்குப்பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் நெவில் விஜயசிங்கா தலைமையில் தீவிர புலன் விசாரணைகளில் ஈடுபட்டிருக்கும் பொலிஸார் இக் கொலை தொடர்பான விடயங்களைப் பெறுவதில் பல சிரமங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் கொலை தொடர்பான விபரங்களைப் பெற முடியாதுள்ளதாகவும் தெரிவித்துள்ளதுடன் இக் கொலைக்கு 9 மில்லிமீற்றர் துப்பாக்கி பயன்படுத்தப்பட்டுள்ள. தாகவும் தெரிவித்துள்ளனர்.

இவரது பிரேதப் பரிசோதனை மட்டக்களப்பு வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட பின் நேற்று மாலை 6.45 மணியளவில் அவரது சடலம உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தற்போது சடலம் மட்டக்களப்புல் உள்ள அவரது இல்லத்தில் வைக்கபட்டுள்ளது. கிழக்கிலங்கைப் பத்திகையாளர்கள் மற்றும் பிரமுகர்கள் உட்பட பெருந்திரளானோர் அவரது பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

இதேவேளை இவரது கொலையையடுதது மட்டக்களப்பில் பதற்றம் நிலவு வதாகவும் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் இதுவரை இக் கொலை தொடர்பாக எவரும் கைது செய்யப்படவில்லையெனவும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இனந்தெரியாத துப்பாக்கி நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட கிழக்கிலங்கையின் மூத்தபத்திரிகையாளர் ஐயாத்துரை நடேசன் வடமராட்சி நெல்லியடியைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

49 வயதான அவர் நான்கு பிள்ளைகளின் தந்தையாவார். இவர் மிக நீண்டகாலமாகவே மட்டக்களப்பில் வசித்து வந்துள்ளார். மட்டக்களப்பு வருமான வரித் திணைக்களத்தின் சிரேஷ்ட வரி மதிப்பீட்டாளராகக் கடமையாற்றி வரும் நடேசன் வீரகேசரி பத்திரிகையினதும் மற்றும் சக்தி, ஐ.பி.சி. வானொலிகளினதும் செய்தியாளராகக் கடமையாற்றி வந்துள்ளார்.

சுமார் 20 வருடங்களுக்கு மேலாக வீரகேசரிப் பத்திரிகையின் செய்தியாளராகக் கடமையாற்றிவந்த அவர் அரசியல் தொடர்பான பல்வேறு ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

30-05-2004 வீரகேசரி வார வெளியீட்டில் அவரால் எழுதப்பட்ட "மீண்டும் கலங்கிய குட்டையாகும் மீன்பாடும் தோனாடாம் மட்டக்களப்பு" என்னும் ஆய்வுக் கட்டுரையில் கிழக்குமாகாணத்தின் தற்போதைய நிலையைத் தனக்கே உரித்தான பாணியில் எழுதியிருந்தார்.

கிழககிலங்கைச் செய்தியாளர் சங்கத்தின் உப தலைவராகவும் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றிய நிர்வாக உறுப்பினருமான பத்திரியாளர் நடேசன் 'இன முரண்பாடுகளும், இனப்பிரச்சினைத் தீர்வும்' என்ற புத்தகத்தை எழுதியுள்ளதுடன் 2000ம் ஆண்டுக்கான சிறந்த பத்திரிகையாளர் விருதையும் பெற்றுள்ளார். (உ-4,61)

# மன்மோகன்சிங்...

வெளிப்படையாகவே தாம் பேசவுள்ளோம். இப் பேச்சுவார்த்தைகளின் போது எமது கூட்டணிக் கட்சிகளான தி.மு.க, ம.தி.மு.க. உட்பட அனைத்துக் கட்சிகளுடனும் திறந்த மனதுடன் பேசுவோம்.

இப் பேச்சுக்களின் போது எதுவிதமான சிக்கலும் ஏற்படமாட்டாதென்று நட்வர் சிங் தெரிவித்தார். இதேவேளை இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் பத்திரிகையாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையில் நேற்றைய பேச்சின் போதோ அல்லது அதற்கு முன் இடம் பெற்ற பேச்சின் போதோ முன்னாள் பிரதமர் ரஜீவ் காந்தியின் கொலை தொடர்பாக ஒரு சொல்லுக்கூடப் பேசப்படவில்லை எனக் கூறினார்.

அடுத்த வெள்ளிக்கிழமை வரை இந்தியாவில் தங்கியிருக்கும் அமைச்சர் கதிர்காமர் காங்கிரஸ் தலைவி சோனியா காந்தியையும் சந்தித்துப் பேசவுள்ளார்.(ம)

# ஜே.வி.பி...

மட்டுமே இடம்பெறுவார்கள் என்று தீர்மானிக்கப்பட்ட போதும், தற்போது அந்த தொகை 37 ஆக அதிகரித்துள்ளதாக ஜே.வி.பி ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கூறியிருக்கிறது. எனினும் இரண்டு அமைச்சர்கள் இராஜிநாமா செய்து மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதனால், அமைச்சரவை அமைச்சர்களின் எண்ணிக்கையில் மாற்றம் ஏற்படவில்லை என்பதை ஜே.வி.பியினர் புரிந்து கொள்வார்கள்.

மேலும் ஜே.வி.பியிடம் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் யாதெனபது குறித்து தனக்கு தெளிவாக புரியவில்லை என்று ரில்வின் சில்வாவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் ஜனாதிபதி கூறியிருக்கின்றார்.

இது தொடர்பாக ஆராய்வதற்கு ஜே.வி.பியுடனான சந்திப்பு ஒன்று நேற்றிரவு நடைபெற ஏற்பாடாகியிருந்தமை குறிப்பிடத் தக்கது. (த)

# நடேசன்...

தமிழ்த் தேசியத்தின் எழுச்சிக்கும் அதன் உட்கட்டுமான வளர்ச்சிக்கும் பணியாற்றியமைக்காகவே அவருக்கு இக் கௌரவம் வழங்கப்பட்டுள்ளது. (ச)

# அறக்கொடை வழங்கும் வைபவம்

(யாழ்ப்பாணம்)

கலைப் பேரரசு, ஏ.ரி.பொன்னுத்துரை, ஞாபகார்த்த விருதுக்கான அறக்கொட வழங்கும் வைபவம் நாளை புதன்கிழமை மாலை 4 மணிக்கு அகில இலங்கை கம்பன் கழக மண்டபத்தில் நடை பெறவுள்ளதென அதன் அமைப்பாளர் நயினை கிருபானந்தா அறிவித்துள்ளார். (ச)

# தேவாரப் பண் வகுப்பு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றம் கொழும்புத்துறை மன்றிலாடும் ஸ்ரீவிநாயகப் பெருமான் தேவஸ்தானத்தில் ஆலயபரிபாலன சபையினரின் அனுசரணையுடன் இன்று செவ்வாய்க் கிழமை பி.ப. 2 மணியளவில் ஆலயத் தேர்த் திருவிழாவும் விசாகத் திருநாளையும் ஒட்டி இலவசத் தேவாரப் பண்ணிசை வகுப்பு ஆரம்பிக்கப் படவுள்ளது. (உ)

**உடன் தேவை**

**பத்திரிகை மடிப்பவர்கள்**
**சிற்றூழியர்கள்**
**ஓவ்செற் மெசின் பயிலுநர்கள்**

02.06.2004 காலை 10 மணிக்கு நேரில் வரவும்

நிர்வாக உத்தியோகத்தர்
'வலம்புரி'
இல.15,வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்

இப்பக்கிரிகை வலம்பரி அன். கோ ஸ்காபனக்காரால் இல.15 வெள்ளாங்கெரு. யாம்ப்பாணம் என்வம் மகவரியிலள்ள அவர்களகு அச்சகக்கில் 01.06.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டகு.